بسم الله الرحمن الرحيم    نحمده ونصلّي على رسوله الكريم    وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர்

காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

இதழ் 24

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

14 துல்கஅதா 1437 ஹிஜ்ரி கமரி   18 ஸஹூர் 1395 ஹிஜ்ரி ஷம்ஸி   18 ஆகஸ்டு 2016


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**திருக்குர்ஆன் பல்வேறு இடங்களில் முழுமையான ஏகத்துவத்தை, தூதரைப் பின்பற்றுவதுடன் தொடர்புபடுத்திக் கூறி இருக்கின்றது. ஏனென்றால், முழுமையான ஓரிறைமை ஒரு புதிய வாழ்க்கையாகும். அது இல்லாமலும் இறைவனின் தூதரைப் பின்பற்றி நடந்து, தனது கீழ்த்தரமான வாழ்வின் மீது மரணம் வர வைக்காமலும் இரட்சிப்பு கிடைக்க முடியாது.**

**எவ்வாறு மனிதன் வெளிப்படையான பொய்யான வணக்கத்திற்குரியவற்றிலிருந்து விலகி விடுகின்றானோ அதாவது சிலைகள் அல்லது மனிதர்கள் அல்லது சூரியன், சந்திரன் போன்றவற்றை வணங்குவதிலிருந்து விலகி நிற்கின்றானோ அவ்வாறே மனதிலுள்ள பொய்க்கடவுளர்களை விட்டும் விலகி இருக்க வேண்டும். அதாவது, தனது ஆன்மீக மற்றும் பௌதீக ஆற்றல்கள் மீது நம்பிக்கை வைப்பதன் மூலமாகவும், அவற்றின் மூலமாக அவன் ஆணவம் என்ற துன்பத்தினால் கைது செய்யப்படுவதிலிருந்தும் தன்னைக் காப்பாற்றி கொள்ள வேண்டும்.**

# வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றுகளிலிருந்து...

இரட்சிப்பை பெறுவதற்கு மனிதன் இறைவனின் இருப்பின் மீது முழுமையான நம்பிக்கையை உருவாக்க வேண்டும் என்பதை நாம் கூறி இருந்தோம். இன்னும் சொல்வதென்றால், நம்பிக்கை கொள்வதுடன் மட்டும் அல்லாமல் அவனுக்கு கீழ்ப்படிந்து நடப்பதற்கும் எப்போதும் தயாராக இருக்க வேண்டும். அவனது திருப்தி கிடைக்கின்ற வழிகளை அடையாளங்கண்டு கொள்ள வேண்டும். உலகம் தோன்றிய நாளிலிருந்து இந்த இரண்டு விஷயங்களும் முழுக்க முழுக்க இறைவனின் தூதர்களின் மூலமாகவே கிடைத்துக் கொண்டிருக்கின்றது. ஒருவர் ஏகத்துவத்தைப் பின்பற்றுபவராக இருந்து இறைவனின் தூதர் மீது அவர் நம்பிக்கை கொள்ளாமல் இருந்தாலும் அவர் இரட்சிப்பைப் பெற்று விடுவார் என்பது எந்த அளவு வீணான எண்ணமாக இருக்கின்றது ? அறிவுக் குருடர்களே ! தூதர்கள் மூலமாக அல்லாமல் ஓரிறைமை எப்போது கிடைத்திருக்க முடியும் ? இதற்கான உதாரணம் இவ்வாறானதாகும். ஒருவர் பிரகாசமான பகல் மீது வெறுப்பு கொள்கின்றார். அதை விட்டும் ஓடுகின்றார். பிறகு, எனக்கு சூரியனே போதுமானதாகும். பகலின் என்ன தேவை இருக்கின்றது ? என்று கேட்பது போன்றதாகும். சூரியன் எப்போதாவது பகலை விட்டுப் பிரிந்து தனியாக இருக்க முடியுமா என்ன ? என்பது அந்த அறிவற்றவருக்கு தெரியாது. அந்தோ ! வேதனை என்னவென்றால் இறைவனின் இருப்பு மறைவிலும் மறைவானது மற்றும் நுட்பத்திலும் நுட்பமானதாகும். எந்த அறிவாலும் அதைக் கண்டுபிடிக்க முடியாது. அதைப் பற்றி அவனே لَا تُدْرِكُهُ الْأَبْصَارُ وَهُوَ يُدْرِكُ الْأَبْصَارَ அதாவது, வெளிப்பார்வைகளும் அகப்பார்வைகளும் அவனை பெற்றுக் கொள்ள முடியாது. அவன் அவற்றின் எல்லையை அறிந்துள்ளான். அவற்றை மிகைத்து நிற்கின்றான் என்று கூறுகின்றான். எனவே, ஓரிறைமையை அறிவால் மட்டும் அறிந்து கொள்வது என்பது சாத்தியமற்றதாகும். ஏனென்றால், ஓரிறைமையின் உண்மை நிலை இதுவாகும்.

எவ்வாறு மனிதன் வெளிப்படையான பொய்யான வணக்கத்திற்குரிய -வற்றிலிருந்து விலகி விடுகின்றேனோ அதாவது சிலைகள் அல்லது மனிதர்கள் அல்லது சூரியன் சந்திரன் போன்றவற்றை வணங்குவதிலிருந்து விலகி நிற்கின்றானோ அவ்வாறே மனதிலுள்ள பொய்க் கடவுளர்களை விட்டும் விலகி இருக்க வேண்டும். அதாவது, தனது ஆன்மீக மற்றும் பௌதீக ஆற்றல்கள் மீது நம்பிக்கை வைப்பதன் மூலமாகவும், அவற்றின் மூலமாக அவர் ஆணவம் என்ற துன்பத்தினால் கைது செய்யப்படுவதிலிருந்தும் தன்னை காப்பாற்றிக் கொள்ள வேண்டும். எனவே, இந்நிலையில் 'தான்' என்ற அகந்தையை கை விடாமலும், தூதரின் கையைப் பற்றிப்பிடிக்காமலும் முழுமையான ஓரிறைமையை அவனால் பெற்றுக் கொள்ள முடியாது.

மேலும், எந்த நபர் தனது ஏதாவதொரு ஆற்றலை இறைவனுக்கு இணையாகக் கருதுகின்றாரோ அவரை ஏகத்துவவாதி என்று எவ்வாறு கூற முடியும் ? இதன் காரணமாகவே திருக்குர்ஆன் பல்வேறு இடங்களில் முழுமையான ஏகத்துவத்தை, தூதரைப் பின்பற்றுவதுடன் தொடர்புபடுத்தி கூறியிருக்கின்றது. ஏனென்றால், முழுமையான ஓரிறைமை ஒரு புதிய வாழ்க்கையாகும். அது இல்லாமலும் இறைவனின் தூதரை பின்பற்றி நடந்து தனது கீழ்த்தரமான வாழ்வின் மீது மரணம் வர வைக்காலும் இரட்சிப்பு கிடைக்க முடியாது.

இந்த அறிவற்றவர்களின் கூற்றின்படி பார்த்தால், திருக்குர்ஆனில் முரண்பாடு இருக்கின்றது என்று கட்டாயம் ஏற்றுக் கொள்ள வேண்டியது வரும். ஏனென்றால், ஒருபுறம் பல இடங்களில் தூதரை ஊடகமாகக் கொள்ளாமல் ஏகத்துவத்தைப் பெற முடியாது என்று அது கூறுகிறது. மறுபுறம் பெற முடியும் என்றும் அது கூறுகின்றது. ஆனால், ஓரிறைமை மற்றும் இரட்சிப்பின் சூரியனும், அதை வெளிப்படுத்துபவரும் தூதர் மட்டுமே ஆவார். அவரது பிரகாசத்தின் மூலமே ஏகத்துவம் வெளிப்படுகின்றது. எனவே, இத்தகைய முரண்பாட்டை இறைவனின் வார்த்தைகளுடன் தொடர்புபடுத்திக் கூற முடியாது. இந்த அறிவற்றவரின் பெரும் தவறு இதுவாகும். அதாவது, அவர் ஏகத்துவத்தின் ஓரிறைமை ஓர் ஒளியாகும். அது வெளிப்படையான மற்றும் மனதிலுள்ள பொய்க் கடவுளர்களை மறுத்த பிறகு உள்ளத்தில் உருவாகின்றது. அது நமது ஒவ்வோர் அணுவிலும் ஊடுருவிச் செல்கின்றது. எனவே, அதனை இறைவன் மற்றும் அவனது தூதர் மூலமாக அல்லாமல் தனது சக்தியினால் மட்டும் எவ்வாறு பெற்றுக் கொள்ள முடியும் ? மனிதன் செய்ய வேண்டிய வேலை இது மட்டும்தான். அதாவது, தனது 'தான்' என்ற அகந்தையின் மீது மரணத்தை வரவழைத்து, நான் பல அறிவுகளின் வளர்ச்சியைப்

(தொடர்ச்சி 6- வது பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

இது ஜமாஅத் பொறுப்பாளர்களின் தேர்தலுக்கான வருடமாகும். இப்போது பெரும்பாலான இடங்களில், நாடுகளிலும் உள்ளூர் ஜமாஅத்துகளிலும் தேர்தல் நடந்து முடிந்து விட்டது. அமீர்கள், தலைவர்கள், ஏனைய பொறுப்பாளர்கள் மற்றும் முபல்லிக்குகளுக்கு ஹுஸூர் அவர்கள் வழங்கியுள்ள மிகவும் முக்கியமான வழிகாட்டல்கள்.

குறிப்பாக ஜமாஅத் பணிகளைச் செய்பவர்களிடம் ஓர் அடிப்படை வித்தியாகம் காணப்பட வேண்டும். அவர்கள் எப்போதும் உண்மையின் மீது நிலைநின்றவாறு தமது தக்வாவின் தரத்தை உயர்த்தியவாறு தமது பணியை மேற்கொள்ள வேண்டும்.

தர்பிய்யத் துறை, செயல் துடிப்புடன் இருந்தால் பெரும்பாலான பிற துறைகளின் பணிகளும் தாமே நடக்க ஆரம்பித்து விடுகின்றன.

தர்பிய்யத் பணியை முதலில் வீட்டிலிருந்து தொடங்குங்கள். வீடு என்பது தர்பிய்யத் செயலரின் வீடல்ல. மாறாக, செயற்குழுவிலுள்ள ஒவ்வொருவரின் வீடாகும். செயற்குழு, தர்பிய்யத் கொடுப்பதில் எல்லாவற்றிற்கும் முதலில் இருக்கின்றது. முதலில் அது தன்னளவில் தர்பிய்யத்தில் நிலை நிற்க வேண்டும். ஜமாஅத்தின் அமீர், ஜமாஅத்தின் சதர், தர்பிய்யத் செயலர் ஆகியோர் எல்லாவற்றிற்கும் முதலில் அவர்கள் என்ன நிகழ்ச்சிகளை உருவாக்கினாலும், முதலில் அவர்கள் அந்தத் திட்டங்களின்படி செயல்படுகிறார்களா? இல்லையா? என்று தமது செயற்குழுவைப் பார்க்க வேண்டும். இறைவனது அடிப்படைக் கட்டளையை, மனிதன் படைக்கப்பட்டதன் நோக்கத்தை செயற்குழு உறுப்பினர்கள் நிறைவேற்றுகிறார்களா? இல்லையா? என்று பார்க்க வேண்டும். இல்லை எனில் தக்வா இல்லை.

அல்லாஹ்வுக்கு செலுத்த வேண்டிய கடமைகளில் எல்லாவற்றையும் விட பெரியது இறை வணக்கமாகும். ஆண்கள் தொழுகையை நிலைநாட்ட வேண்டும் என்று கட்டளை உள்ளது. தொழுகையை நிலைநாட்டுவது என்பது ஜமாஅத்துடன் தொழுகையை நிலைநாட்டுவதாகும். எனவே, அமீர்மார்கள், தலைவர்கள், பொறுப்பாளர்கள் ஆகியோர் தமது தொழுகைகளைப் பாதுகாத்து, அதனை ஜமாஅத்துடன் நிறைவேற்ற முழுமையாக முயற்சி செய்யுங்கள். நமது ஒவ்வொரு பொறுப்பாளருக்கும் தொழுகையை ஜமாஅத்துடன் நிறைவேற்றும் உணர்வு இருக்க வேண்டும். அது அல்லாமல் நீங்கள் அமானிதங்களின் உரிமையை நிறைவேற்றியவர்களாக ஆக மாட்டீர்கள். இதுவே திருக்குர்ஆனில் மீண்டும் மீண்டும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அது தவிர சில விஷயங்கள் உள்ளன. அவற்றையும் பொறுப்பாளர்கள் குறிப்பாக கவனத்தில் கொள்ள வேண்டும். அவை மக்களின் உரிமைகளை நிறைவேற்றுவது பொறுப்பாளர்கள் ஜமாஅத் மக்களுடன் நடந்து கொள்ளும் விதத்துடன் தொடர்புடையவையாகும்.

பிறகு இன்னொரு பண்பு குறிப்பாக பொறுப்பாளர்களிடம் இருக்க வேண்டும். அது பணிவு ஆகும்.

பிறகு பொறுப்பாளர்களுக்கு ஒரு சிறப்புத்தன்மை இருக்க வேண்டும். அது என்னவென்றால், ஜமாஅத் நபர்களுடன் தமக்குக் கீழுள்ளவர்களுடன் நல்ல முறையில் நடக்க வேண்டும். எவருடைய உள்ளத்திலும் எனது அனுபவம், எனது அறிவுதான் ஜமாஅத் பணிகளை நடத்திக் கொண்டு செல்கிறது என்ற எண்ணம் வர வேண்டாம் அல்லது எனது அனுபவம்தான் ஜமாஅத் பணிகளை நடத்திச் செல்ல முடியும் என்றும் எண்ணம் வர வேண்டாம். ஜமாஅத் பணிகளை இறைவனின் அருளே நடத்திக் கொண்டு செல்கிறது.

பொறுப்பாளர்களிடம் இருக்க வேண்டிய இன்னொரு பண்பு இனிய குணமாகும்; நல்லொழுக்கத்துடன் நடப்பதாகும்.

குறிப்பாக அமீர்மார்கள் தலைவர்கள் மற்றும் தர்பிய்யத் துறை மற்றும் முடிவெடுக்கும் வட்டத்தில் இருப்பவர்களுக்கு பெரும் பொறுப்பு இருக்கிறது. அவர்கள் மக்களுக்கு எளிதை ஏற்படுத்தும் வழியைப் பற்றி சிந்திக்க வேண்டும். ஆனால், அல்லாஹ்வின் கட்டளைக்குள் இருந்தவாறு இவ்வழிமுறையைக் கடைபிடிக்க வேண்டும்

பிறகு அமீர்மார்கள், தலைவர்கள், செயலர்கள் ஆகியோரின் மிக முக்கியமான பணியாவது, தலைமையகத்திலிருந்து என்ன வழிகாட்டல்கள் அனுப்பப்படுகின்றனவோ அல்லது சுற்றறிக்கைகள் அனுப்பப்படுகின்றனவோ அதனை உடனே முழு கவனத்துடன் செயல்படுத்த வேண்டும். ஜமாஅத்துகள் மூலமாக அதனை செய்ய வைக்க வேண்டும்.

வஸிய்யத் செய்தவர்களைப் பற்றியும் நான் கூற விரும்புவதாவது, வஸிய்யத் செய்தவர் முதலில் நினைவில் கொள்ள வேண்டிய விஷயம், தமது சந்தாவை வழங்கியது சம்பந்தமான கணக்கை தாமே வைத்திருப்பது அவரது பொறுப்பாகும். ஆனால், தலைமையக அலுவலகம் மற்றும் சம்பந்தப்பட்ட செயலரின் பணியும் இதுவேயாகும். அவர் ஒவ்வொரு வஸிய்யத் செய்தவரின் கணக்கையும் முழுமையாக வைத்திருக்க வேண்டும். தேவைப்படும் போது அவர்களுக்கு நினைவூட்டவும் வேண்டும். அவர்களின் சந்தாவின் நிலை என்ன என்பதை தெரிவிக்க வேண்டும். தேசிய ஜமாஅத்தின் பணியாவது, உள்ளூர் ஜமாஅத்துகளின் செயலர்களை செயற்துடிப்புள்ளவர்களாக ஆக்க வேண்டும். ஒவ்வொரு வஸிய்யத் செய்தவரும் உள்ளூர் செயலரின் தொடர்பில் இருக்க வேண்டும்.

எல்லாப் பொறுப்பாளர்களுக்கும் வரக்கூடிய 3 ஆண்டுகளுக்கு அல்லாஹ் தொண்டு செய்ய வாய்ப்பளிப்பானாக! அதில் அவர்கள் அதிகமதிகமாக எல்லா திறமைகளையும் பயன்படுத்தியவாறு பணி செய்ய முடியட்டுமாக! தமது ஒவ்வொரு சொல் செயல் மூலம் ஜமாஅத்திற்கு ஒரு முன்மாதிரியாக அவர்கள் விளங்குவார்களாக!

மதிப்பிற்குரிய சாஹிப் ஸாதா மிர்ஸா முனீர் அஹ்மது சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய சாஹிப் ஸாதி தாஹிரா ஸித்தீகா சாஹிபா அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். மர்ஹூமாவின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவர்களுக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் புதூஹ் பள்ளிவாயிலில்**
**15 ஜுலை 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **15 வஃபா** மாதம் ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُولُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ ۔ الرَّحْمٰنِ الرَّحِيمِ ۔ مٰلِكِ يَوْمِ الدِّينِ ۔ إِيَّاكَ نَعْبُدُ
وَإِيَّاكَ نَسْتَعِينُ ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ۔ صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّينَ ۔

இது ஜமாஅத் பொறுப்பாளர்களின் தேர்தலுக்கான வருடம் என்று சில காலத்திற்கு முன்பு நான் கூறியிருந்தேன். இப்போது பெரும்பாலான இடங்களில் தேர்தல் நடந்து முடிந்து விட்டது. நாடுகளிலும், உள்ளூர் ஜமாஅத்துகளிலும் புதிய பொறுப்பாளர்கள் தமது பணியை நிர்வகிக்க ஆரம்பித்து விட்டனர். பொறுப்பாளர்கள், சில இடங்களில் சில அமீர்மார்கள், சில தலைவர்கள் மற்றும் பிற பொறுப்பாளர்கள் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். ஆனால், பெரும்பாலான இடங்களில் முதலில் பணி செய்தவர்களே மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். புதிதாக வந்தவர்களும் இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். அல்லாஹ் அவர்களை ஜமாஅத்தின் பணிக்காகத் தேர்ந்தெடுத்துள்ளான். அதே வேளையில், அவர்கள் பணிவுடன் அல்லாஹ்வுக்கு முன்னால் குனிந்தவர்களாக அல்லாஹ்விடம் உதவி கேட்க வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு, அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட இந்த அமானத்தின் உரிமையைச் செலுத்துவதற்கு வாய்ப்பு வழங்குவானாக!

அதேபோன்று மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர்களும் அல்லாஹ் அவர்களுக்கு மீண்டும் பணி செய்யும் வாய்ப்பினை வழங்கியதற்கு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் அதே வேளையில் அல்லாஹ்விடம் தாழ்மையான முறையில்

துஆவும் கேட்க வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு எல்லாத் தகுதிகளுடனும் இந்த அமானிதத்தின் உரிமையைச் செலுத்துவதற்கான வாய்ப்பினை வழங்குவானாக!

நினைவில் கொள்ளுங்கள்! ஜமாஅத்தின் சேவையை ஒரு சாதாரண சேவை என்று கருத வேண்டாம். மேலோட்டமாகப் பார்க்க வேண்டாம். நம்மில் ஒவ்வொருவரும் அவர் பொறுப்பாளராக இருந்தாலும் சரி, அவர் ஒரு சாதாரண அஹ்மதியாக இருந்தாலும் சரி, மார்க்கத்திற்கு உலகத்தை விட முன்னுரிமை தருவதாக அவர் ஓர் உறுதிமொழி எடுத்துள்ளார். ஒரு மனிதர் மார்க்கத்திற்கு சேவை செய்வதற்காக, பொறுப்பாளராக ஒரு பணி செய்வதாக ஒப்புக் கொண்டாலோ அல்லது ஒரு பதவியில் நியமிக்கப்பட்டாலோ அவருக்கு மற்றவரை விட அதிகமான பொறுப்பு இருக்கிறது. அவர் தனது பொறுப்பை அதிகமாக நிறைவேற்ற வேண்டும். அவர் இந்த உறுதிமொழியை இறைவனிடம் கொடுத்துள்ளார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்! அல்லாஹ் தனது உறுதிமொழியை நிறைவேற்றுமாறு திருக்குர்ஆனில் பல இடங்களில் கூறியுள்ளான். உங்கள் மீது ஒப்படைக்கப்பட்ட அமானிதம் மற்றும் நீங்கள் எடுத்துக் கொண்ட உறுதிமொழி ஆகியவற்றை நிறைவேற்றுங்கள்.

ஓரிடத்தில், அல்லாஹ் தனது கூற்றின் மீது உண்மையுடனும் தக்வாவுடனும் செயல்படுபவர்களுக்கு இந்த அடையாளத்தைக் கூறியுள்ளான். அதாவது, وَالْمُوْفُوْنَ بِعَهْدِهِمْ اِذَا عٰهَدُوْا 'அவர்கள் உறுதிமொழி எடுக்கும்போது தங்கள் உறுதிமொழியை நிறைவேற்றுவார்கள்.' **(2:178)** எனவே, குறிப்பாக ஜமாஅத் பணிகளைச் செய்பவர்களிடம் ஓர் அடிப்படை வித்தியாசம் காணப்பட வேண்டும். அவர்கள் எப்போதும் உண்மையின் மீது நிலைநின்றவாறு தமது தக்வாவின் தரத்தை உயர்த்தியவாறு தமது பணியை மேற்கொள்ள வேண்டும். அவர்களின் உண்மையின் தரத்தில் சிறிதேனும் குறை இருந்தால், அவர்களின் தக்வாவின் தரம் ஒரு சாதாரண ஜமாஅத் நபருக்கு ஒரு முன்மாதிரியாக இல்லையென்றால் அவர் தனது பொறுப்பு மற்றும் தனது உரிமையை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் செலுத்தவில்லை என்றே அதற்கு பொருள். எனவே, அமீர்மார்கள், சத்ர்மார்கள் எல்லாவற்றிற்கும் முதலில் தமது முன்மாதிரியை நிலைநாட்டுங்கள். தமது செயற்குழுவின் முன்னாலும் சரி, ஜமாஅத் நபர்களின் முன்னாலும் சரி, தர்பிய்யத் செயலர்களிடம் தர்பிய்யத் கொடுக்கும் பணி உள்ளது. தர்பிய்யத் பணி முன்மாதிரி நிலைநாட்டப்படும் போதுதான் சிறந்த முறையில் நடைபெற முடியும். பணி செய்பவர், மற்றவருக்குப் போதனை செய்பவர் தாமும் அதன்படி செயல்படுபவராக இருக்க வேண்டும். தர்பிய்யத் செயலர்களும், ஜமாஅத் நபர்களுக்கு முன் தமது முன்மாதிரியை நிலைநாட்ட வேண்டும். அவர்களிடம் ஜமாஅத்தின் தர்பிய்யத் பொறுப்பு இருக்கிறது.

நான் பல சந்தர்ப்பங்களில் கூறியுள்ளேன். தர்பிய்யத் துறை, செயல் துடிப்புடன் இருந்தால் பெரும்பாலான பிற துறைகளின் பணிகளும் தாமே நடக்க ஆரம்பித்து விடுகின்றன. ஜமாஅத் நபர்களின் தர்பிய்யத் தகுதி உயர்ந்திருக்கும் அளவுக்கு மற்ற துறைகளின் பணிகள் எளிதாக இருக்கும். உதாரணமாக, பொருளாளரின் பணி எளிதாக இருக்கும். பொதுச் செயலரின் வேலை எளிதாக இருக்கும். தப்லீக் செயலரின் பணி எளிதாக இருக்கும். அதேபோன்று பிற துறைகளின் பணிகளும், கலாவின் பணிகளும் எளிதாக இருக்கும்.

அநேகமாக, தர்பிய்யத் பணியை முதலில் வீட்டிலிருந்து தொடங்குங்கள் என்று நான் பல்வேறு இடங்களின் –அநேகமாக– செயற்குழுக் கூட்டங்களில் கூறி வந்துள்ளேன். வீடு என்பது தர்பிய்யத் செயலரின் வீடல்ல. மாறாக, செயற்குழுவில் உள்ள ஒவ்வொருவரின் வீடாகும். செயற்குழு, தர்பிய்யத் கொடுப்பதில் எல்லாவற்றிற்கும் முதலில் இருக்கின்றது. முதலில் அது தன்னளவில் தர்பிய்யத்தில் நிலை நிற்க வேண்டும். ஜமாஅத்தின் அமீர், ஜமாஅத்தின் சத்ர், தர்பிய்யத் செயலர் ஆகியோர் எல்லாவற்றிற்கும் முதலில் அவர்கள் என்ன நிகழ்ச்சிகள் போட்டாலும், முதலில் அவர்கள் அந்தத் திட்டங்களின்படி செயல்படுகிறார்களா? இல்லையா? என்று தமது செயற்குழுவைப் பார்க்க வேண்டும். இறைவனது அடிப்படைக் கட்டளையை, மனிதன் படைக்கப்பட்டதன் நோக்கத்தை செயற்குழு உறுப்பினர்கள் நிறைவேற்று –கிறார்களா? இல்லையா? என்று பார்க்க வேண்டும். இல்லை எனில் தக்வா இல்லை. அல்லாஹ்வுக்கு செலுத்த வேண்டிய கடமைகளில் எல்லாவற்றையும் விட பெரியது இறை வணக்கமாகும். ஆண்கள் தொழுகையை நிலைநாட்ட வேண்டும் என்று கட்டளை உள்ளது. தொழுகையை நிலைநாட்டுவது என்பது ஜமாஅத்துடன் தொழுகையை நிலைநாட்டுவதாகும்.

எனவே, அமீர்மார்கள், தலைவர்கள், பொறுப்பாளர்கள் ஆகியோர் தமது தொழுகைகளைப் பாதுகாத்து, அதனை ஜமாஅத்துடன் நிறைவேற்ற முழுமையாக முயற்சி செய்யுங்கள். எங்கெல்லாம் நமது பள்ளிவாயில்களும் தொழுகை மையங்களும் நிரப்பப்படுமோ அங்கு அவை அல்லாஹ்வின் அருள்களைப் பெறுபவையாகவும் இருக்கும். அவை தமது செயல் முன்மாதிரியால் ஜமாஅத் அன்பர்களுக்கு தர்பிய்யத் கொடுப்பவையாக இருக்கும். அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாகவும் இருக்கும். அவர்களின் பணிகள் எளிதாகவும் ஆகும். அவர்கள் வெறுமனே வாய்ப்பேச்சு பேசுபவர்களாக இருக்க மாட்டார்கள். எனவே, பணியாற்றுபவர்கள் முதலில் தம்மை ஆய்வு செய்ய வேண்டும். எந்த அளவுக்கு அவர்களின் சொல்லும் செயலும் ஒன்றாக இருக்கின்றன என்று ஆய்வு செய்ய வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான்: يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لِمَ تَقُوْلُوْنَ مَا لَا تَفْعَلُوْنَ நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் செய்யாததை ஏன் சொல்கிறீர்கள்? **(61:3)**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உலகத்தில், தான் கூறி விட்டு அதனை தானே செய்யாதவர்கள் இருந்தனர்; இருக்கின்றனர்; இருப்பர் என்று இந்த வசனம் கூறுகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "நீங்கள் எனது வார்த்தையைக் கேட்டு நன்றாக நினைவில் வையுங்கள். மனிதனது உரையாடல்கள் உண்மையான உள்ளத்துடன் இல்லை எனில் செயல் ஆற்றல் அதில் இல்லை எனில் அது தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருக்காது." (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 67; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

தொடர்ந்து அன்னார் கூறுகின்றார்கள்: "நினைவில் கொள்ளுங்கள். செயல் இல்லாமல் வாயளவிலான வார்த்தைகள் வேலைக்கு உதவாது. அல்லாஹ்விடம் வாய் வார்த்தைகள் எந்த மதிப்பையும் பெறாது." (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 77; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல்லாஹ்வின் இந்தக் கட்டளைக்கேற்ப நமது சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் முரண்பாடு கூடாது என்று தெளிவாகக் கூறி விட்டார்கள். எனவே, எல்லாவற்றிற்கும் முதலில் இவ்விஷயத்தை முன்னுறுத்தி தம்மை ஆய்வு செய்பவராக நமது பொறுப்பாளர்கள் விளங்க வேண்டும். எங்கெல்லாம் தூரம் அதிகமோ, சில வீடுகளே இருக்குமோ, தொழுகை மையங்களுக்கான வசதிகளும் இல்லையோ அங்கு வீடுகளில் தொழுகைக்கான ஏற்பாடு செய்யலாம். செயல் அளவில் இது கஷ்டமில்லை. பெரும்பாலான அஹ்மதிகள் இதனைப் பேணி வருகின்றனர். அவர்களிடம் முறைப்படியான சேவைகளும் இல்லை. எந்த செயற்குழு உறுப்பினரும் இல்லை. ஆனால், அவர்கள் தமது வீடுகளில் சுற்று வட்டாரத்தின் அஹ்மதிகளைத் திரட்டி தொழுகையை ஜமாஅத்துடன் நிறைவேற்றுகின்றனர். எனவே, உணர்வு இருந்தால் எல்லாமே முடியும். நமது ஒவ்வொரு பொறுப்பாளருக்கும் தொழுகையை ஜமாஅத்துடன் நிறைவேற்றும் உணர்வு இருக்க வேண்டும். அது அல்லாமல் நீங்கள் அமானிதங்களின் உரிமையை நிறைவேற்றியவர்களாக ஆக மாட்டீர்கள். இதுவே திருக்குர்ஆனில் மீண்டும் மீண்டும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே, எப்போதும் பொறுப்பாளர்கள் நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹ் உண்மையான நம்பிக்கை கொண்டவருடைய அடையாளமாக இதையே தான் கூறியுள்ளான். அவர்கள் தமது அமானிதங்களையும் உடன்படிக்கைகளையும் நிறைவேற்றுவார்கள். அவற்றைக் கண்காணிப்பவர்களாக இருப்பார்கள். நம்மிடம் என்ன அமானிதங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளனவோ நாம் என்ன சேவை செய்வதாக உறுதிமொழி எடுத்துள்ளோமோ, அதில் நமது தரப்பில் எந்த பலவீனமோ குறைபாடோ ஏற்படவில்லையே என்று பார்ப்பவர்களாக அவர்கள் இருக்கின்றனர். ஏனெனில், இது ஒரு சாதாரண விஷயமல்ல. திருக்குர்ஆனில் அல்லாஹ் இதனையும் கூறியுள்ளான். اِنَّ الْعَهْدَ كَانَ مَسْـُٔوْلًا ஒவ்வொரு உடன்படிக்கை குறித்தும் ஒருநாள் இல்லா விட்டாலும் ஒரு நாளில் நீங்கள் பதில் சொல்ல வேண்டியது வரும். **(17:35)** இது அடிப்படையான விஷயமாகும். இபாதத் – இறை வணக்கம் மனிதப் படைப்பின் அடிப்படை விஷயமாகும். நாம் அதன் உரிமையை நிறைவேற்ற வேண்டும். அதில் சோம்பல் காட்டுவது குறிப்பாக பொறுப்பாளர்களிடம் கூடவே கூடாது. உண்மையான நம்பிக்கை கொண்டவர்களிடமும் அது கண்டிப்பாக இருக்கவே கூடாது. அது தவிர சில விஷயங்கள் உள்ளன. அவற்றையும் பொறுப்பாளர்கள் குறிப்பாக கவனத்தில் கொள்ள வேண்டும். அவை மக்களின் உரிமைகளை நிறைவேற்றுவது மற்றும் பொறுப்பாளர்கள் ஜமாஅத் மக்களுடன் நடந்து கொள்ளும் விதத்துடன் தொடர்புடையவையாகும். இவ்வாறு இந்த விஷயங்கள் பொறுப்பாளர்களின் உடன்படிக்கையுடனும் தொடர்புடையவையாகும்.

எந்தப் பொறுப்பாளரும் அதிகாரி என்ற வடிவத்தில் நியமிக்கப்படுவதில்லை. மாறாக, இஸ்லாத்தில் பொறுப்பாளர்களின் கண்ணோட்டமோ அல்லது பொறுப்பாளர்கள் பற்றிய பார்வையோ முற்றிலும் மாறுபட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை இவ்வாறு கூறியுள்ளார்கள். சமுதாயத்தின் தலைவர் அதன் தொண்டரே ஆவார். (கன்ஸுல் உம்மால் கிதாபுஸ் ஸஃபர். அல்ஃபஸ்லுல்லாஹி ஃபீ ஆதாபிஃஸ் ஸஃபரி பக்கம் 6-7, 302 ஹதீஸ் எண்.17516, தாருல் குதுபுல் இஸ்லாமிய்யா பைருத்தில் 2004 -ல் வெளியிடப்பட்டது.) எனவே, பொறுப்பாளர் மக்களின் விவகாரங்களில் தனது அமானிதத்தை நிறைவேற்றுவது என்பது மக்களுக்காக ஒரு சேவகராக ஆகி இருப்பதேயாகும். மனிதனிடம் தியாகத்தின் அடிப்படை உருவாகும்போது இந்த நிலை உருவாகும். அவரிடம் எளிமையும் பணிவும் உருவாக வேண்டும். அவருடைய பொறுமையின் தகுதி உயர்வானதாக இருக்க வேண்டும். சில நேரங்களில் பொறுப்பாளர்களுக்கு சில பேச்சுக்களைக் கேட்க வேண்டியது வருகிறது. கேட்க வேண்டியது வந்தாலும் கேட்க வேண்டும். இதனை பொறுப்பாளர்கள் தாமே ஆய்வு செய்ய முடியும். அவர்களின் சகிப்புத்தன்மையின் வட்டம் எவ்வளவு உயரத்தில் உள்ளது என்பதை அவர்களே ஆய்வு செய்ய முடியும். பணிவின் நிலை எப்படி உள்ளது? என்பதை ஆய்வு செய்ய முடியும்.

சில வேளைகளில் சில பொறுப்பாளர்களின் விவகாரங்கள் நம்முன் வருகின்றன. அவர்களிடம் சகிப்புத் தன்மை அறவே இருப்பதில்லை. எவராவது ஒருவர் மரியாதை குறைவாக அல்லது முரட்டுத்தனமாக நடந்து கொண்டால்

உடனே அவர்களும் அதே தொனியில் பதில் தந்து விடுகின்றனர். ஒரு சாதாரண மனிதர் தீய செயல் செய்தால் அதனால் பெரிய விளைவு ஏற்படப் போவதில்லை. இவர் தீய ஒழுக்கமுடையவர் அல்லது இவரது ஒழுக்க நிலை வீழ்ச்சி அடைந்துள்ளது என்று மக்கள் கூறுவர். ஆனால், பொறுப்பாளர்களின் வாயிலிருந்து தவறான வார்த்தை வந்து விட்டால் பொறுப்பாளரின் கண்ணியமும் மரியாதையும் பாதிக்கப்பட்டு விடும். அத்துடன் ஜமாஅத்தின் நபர்களிடமும் அந்த தாக்கம் ஏற்படும். ஜமாஅத்திற்கென்று இருக்க வேண்டிய மரியாதை, எந்தத் தரத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அதனைப் பார்க்க விரும்பினார்களோ அது இல்லாமல் ஜமாஅத்திற்கு அவப்பெயர் ஏற்படும்; ஏற்பட முடியும். அப்படி நடந்ததற்கு ஒரேயொரு உதாரணம்தான் உள்ளது என்று கூறினாலும் சரியே! இத்தகைய உதாரணங்கள் சில இடங்களில் காணக் கிடைக்கின்றன. பள்ளிவாயிலிலேயே சண்டை சச்சரவுகள் ஆரம்பமாகி விடுகின்றன. அவை குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் மீது தீய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

அல்லாஹ் நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறான்? தியாகத்தின் உயரிய முன்மாதிரியை நிலைநாட்டுபவர்களை அல்லாஹ் எவ்வாறு குறிப்பிடுகிறான் என்பதைப் பற்றி ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: وَيُؤْثِرُوْنَ عَلٰٓى اَنْفُسِهِمْ முஃமீன் என்பவர் தனது மார்க்க சகோதரருக்கு தன்னை விட முன்னுரிமை தருபவராக இருக்கிறார். அன்ஸார் அத்தகைய முன்மாதிரியை முஹாஜிர் –களுக்காகக் காட்டினர். இதுவே நமக்கு ஒரு முன்மாதிரியாகும். தமது நஃப்ஸை விட முன்னுரிமை தருவது பெரிய விஷயமாகும். மிகப் பெரிய விஷயமாகும். சில வேளை ஒருவருக்கு தர வேண்டிய உரிமை கூட முழுமையாகத் தரப்படுவதில்லை. மக்களின் சில விவகாரங்கள் பொறுப்பாளர்களிடம் வருகின்றன அல்லது தலைமையகத்திற்கு அறிக்கை அனுப்ப வேண்டும் என்பதற்காக சில விவகாரங்களை அனுப்புகின்றனர். அப்போது மிகவும் கவனக் குறைவுடன் அறிக்கை அனுப்பப்படுகிறது. சரியாக ஆய்வு செய்யப்படுவதில்லை. அறிக்கை அனுப்பப்பட்டு விடுகிறது அல்லது தேவை உடையவர்களின் விண்ணப்பங்கள் ஒதுக்கி வைக்கப்படுகின்றன. அதனால் தேவை உடையவர்களின் தேவை குறித்த காலத்தில் நிறைவேறாததால் தேவை உடையவர் நஷ்டப்படுகிறார் அல்லது சிரமப்பட வேண்டியது வருகிறது. சில பொறுப்பாளர்கள் தமது வேலைப் பளுவை காரணம் காட்டுகின்றனர். சிலரிடம் எந்தக் காரணமும் இருப்பதில்லை. வெறும் கவனமின்மைதான் காணப்படுகின்றது. அவர்களின் சொந்த விவகாரங்களிலோ அல்லது அவர்களது உறவினர்களின் விவகாரங்களிலோ அவர்களின் முன்னுரிமையே வேறாக இருக்கின்றது.

எனவே, உண்மையான சேவை உணர்வு, தியாக உணர்வு, தமது அமானிதத்தின் உரிமையைச் சரியாக நிறைவேற்றுவது ஆகிய இவைதான் பிறருக்காக ஒரு கவலையுடன் பணி செய்ய வைக்கிறது. இந்த தியாகத்தின் அடிப்படை மற்றவரின் கஷ்டத்தை தனது கஷ்டமாக நினைக்க வைக்கிறது. அதனால் ஜமாஅத்தின் தியாகத்தின் உணர்வும் அதிகரிக்கிறது. ஒருவர் மற்றவரின் உரிமையைப் பறிப்பதை விடுத்து பிறரின் உரிமையைத் தருவதன் பக்கம் கவனம் பிறக்கும். உரிமையைப் பெறுதலின் பக்கம் கவனம் செலுத்துவதை விட உரிமையை வழங்குவதற்கு அதிகமாக கவனம் பிறக்கும் என்றால் அப்போதுதான் அமைதி உருவாகும் என்று நாம் அன்னியர் முன்பு கூறுகிறோம். ஆனால் நமக்குள் இந்த தரம் இல்லை எனில் அல்லாஹ்வுக்கு பிடிக்காத வேலையைச் செய்பவர்களாகி விடுவோம்.

பிறகு இன்னொரு பண்பு குறிப்பாக பொறுப்பாளர்களிடம் இருக்க வேண்டும். அது பணிவு ஆகும். ரஹ்மானுடைய அடியார்களுக்கு அல்லாஹ் இந்த அடையாளத்தைக் கூறுகிறான். يَمْشُوْنَ عَلَى الْاَرْضِ هَوْنًا அவர்கள் பூமியில் பணிவுடன் நடப்பார்கள். (25:64) இதற்கும் உயரிய உதாரணம் நமது பொறுப்பாளர்களிடம் காணப்பட வேண்டும். ஒருவரிடம் எவ்வளவு பெரிய பொறுப்பு இருந்தாலும் அந்த அளவுக்கு சேவையின் உணர்வுடன் மக்களுடன் சந்திக்கவும் பணிவு காட்டவும் வேண்டும். அதுவே பெரிய மனிதத் தன்மையாகும். மக்கள் பார்க்கவும் செய்கிறார்கள். உணரவும் செய்கிறார்கள். பொறுப்பாளர்களின் நடைமுறை எவ்வாறு இருக்கிறது? என்று பார்க்கிறார்கள். சில வேளையில் மக்கள் என்னிடம் எழுதவும் செய்கிறார்கள். இன்ன பொறுப்பாளரின் நடைமுறை இவ்வாறிருந்தது. ஆனால் இன்று எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அந்த பொறுப்பாளர் இப்போது எனக்கு ஸலாம் சொல்வது மட்டுமின்றி நலம் விசாரிக்கவும் செய்தார். நல்ல முறையில் நடந்து கொண்டார். அவரது நடைமுறையைப் பார்த்து எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது என எழுதுகின்றனர். இதிலிருந்து அந்தப் பொறுப்பாளரின் பெரிய மனிதத் தன்மை வெளிப்பட்டது.

எனவே, பெரும்பாலான ஜமாஅத் அன்பர்கள் பொறுப்பாளர்களின் அன்பு, மென்மை, பரிவு ஆகிய நடைமுறைகளில் மகிழ்ச்சி அடைந்து எல்லாத் தியாகங்களுக்கும் ஆயத்தமாகி விடுகின்றனர். ஒரு பொறுப்பாளரின் உள்ளத்தில் தனது பொறுப்புகளின் காரணமாக ஏதாவது பெருமை உள்ளத்தில் தோன்றினால், அகம்பாவம் தோன்றினால் அது அவரை அல்லாஹ்வை விட்டும் தூர விலக்கி விடுகிறது என்பதை அத்தகையவர் நினைவில் கொள்ள வேண்டும். மனிதன் இறைவனை விட்டு விலகி விட்டால் பிறகு பணியில் பரக்கத் இருக்காது. மார்க்கத்தின் பணி முழுக்க முழுக்க இறை திருப்தி பெறுவதற்காகவேயாகும். இறைவனது திருப்தியே கிடைக்காத போது அத்தகைய மனிதர் ஜமாஅத்தின் பயனை விட ஜமாஅத்திற்கு நஷ்டம் விளைவிப்பவராகப் பெரும்பாலும் ஆகி விடுகிறார். எனவே, எப்போதும் பொறுப்பாளர்கள் இந்த அடிப்படையில் தம்மை ஆய்வு செய்ய வேண்டும். தம்மிடம் பணிவு இருக்கிறதா? இல்லையா? இருந்தால் எந்த அளவுக்கு இருக்கிறது? என்று பார்க்க வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: எவ்வளவு அதிகமாக எளிமையையும் பணிவையும் ஒருவர் மேற்கொள்வாரோ அந்த அளவுக்கு அல்லாஹ் அவருக்கு உயர் தகுதியை வழங்குகின்றான். (ஸஹீஹ் முஸ்லிம். கிதாபுல் பிர்ரி வஸ்ஸிலா வல் ஆதாப் பாபு இஸ்திஜாபுல் அ·.ப்வி வத்தவாஸிஹ் ஹதீஸ் எண்.6487) எனவே, ஒவ்வொரு பொறுப்பாளரும் நினைவில் கொள்ள வேண்டும். அவருக்கு அல்லாஹ் ஜமாஅத்திற்கு பணிவிடை செய்ய வாய்ப்பு தந்திருந்தால் அது இறைவனின் பேருபகாரமாகும். அந்த பேருபகாரத்திற்கு நன்றி செலுத்துவது மிகவும் அதிகமான பணிவும் அடக்கமும் உருவாகுவதாகும். பணிவும் அடக்கமும் உருவாகா விட்டால் அல்லாஹ்வின் கருணைக்கு நன்றி செலுத்த முடியாது. பெரும்பாலும் தெரிய வருகிறது. சிலர் பொதுவான நிலைகளில் சந்திக்கும் போது மிகவும் பணிவைக் காட்டுகிறார்கள். மக்களிடமும் சரியான முறையில் சந்திப்பவர்களாக இருக்கின்றனர். ஆனால் தனக்கு கீழுள்ளவருடன் அல்லது சாதாரண நபருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டால் உடனே அவர்களது அதிகார மனப்பான்மை விழித்துக் கொள்கிறது. தாம் பெரும் பொறுப்பாளர் எனும் உணர்வு தமது கீழுள்ளவரிடம் அகம்பாவமான நடவடிக்கையை வெளிப்பட வைக்கிறது. ஒருவர் இனிமையாக இருக்கும் வரையிலும் முரண்பாடு காட்டாத வரையிலும் பணிவு காட்டுவதற்குப் பெயர் பணிவல்ல. அது செயற்கையான பணிவாகும். அசல் நிலை எப்போது வெளிப்படும் எனில் முரண்பட்ட கருத்து இருக்கும் போது அல்லது கீழுள்ளவர் தமது விருப்பத்திற்கு மாற்றமான பேச்சுப் பேசும்போது பிறகும் கூட நீதியில் நிலைநின்றவாறு அந்தக் கருத்தை நன்றாக ஆய்வு செய்து தீர்ப்பளிக்கும் போது தான் அது வெளிப்படும். மேலும் அந்தப் பணிவுடன் உயரிய தைரியமும் வெளிப்படும். இவை நடக்கும் போது அந்தப் பணிவு உண்மையான பணிவு என்று அழைக்கப்படும். எப்போதும் பொறுப்பாளர்கள் இந்தக் கட்டளையை முன்னிறுத்த வேண்டும். அதாவது, وَلَا تُصَعِّرْ خَدَّكَ لِلنَّاسِ وَلَا تَمْشِ فِى الْاَرْضِ مَرَحًا உனது கன்னங்களை கர்வத்தால் பொங்கச் செய்யாதே! பூமியில் ஆணவத்துடன் நடக்காதே! **(31:19)**

கருத்து வேறுபாடுகள் பற்றி குறிப்பிட்டேன். அது சம்பந்தமாக இதுவும் கூறுகிறேன். ஜமாஅத்தின் அமீருக்கு செயற்குழுவின் கருத்தை மறுத்து தனது கருத்தின்படி முடிவெடுக்க சந்தேகமின்றி ஜமாஅத்தின் விதிமுறை அனுமதி அளிக்கிறது தான். ஆனால், எல்லாரையும் ஒன்றாக அழைத்துச் செல்வதற்கு எப்போதும் முயற்சி செய்ய வேண்டும். ஆலோசனைகளின்படியும் பெரும்பாலாரின் கருத்துப்படியும் முடிவெடுக்க வேண்டும்; பணி செய்ய வேண்டும். சில இடங்களில் அமீர்மார்கள் இந்த உரிமையை அதிகமாகப் பயன்படுத்தத் தொடங்கி விடுகின்றனர். இந்த உரிமையை மிக மிக இன்றியமையாத சூழலில்தான் பயன்படுத்த வேண்டும். ஜமாஅத்திற்கு இதில் தான் நன்மை என்று தெரிய வரும் போது பிறகு செயற்குழுவிற்கு அதனை தெளிவுபடுத்தவும் வேண்டும். ஜமாஅத்தின் பரந்த நலனை முன்னிறுத்தியவாறும் முடிவு இருக்க வேண்டும். அதற்காக துஆவுடன் அல்லாஹ்விடம் உதவி தேட வேண்டும். தமது அறிவை மட்டும் சார்ந்திருக்க வேண்டாம். தெளிவாகத் தெரிந்து கொள்ளுங்கள். செயற்குழுவின் கருத்தை மறுத்து விட்டு தனது கருத்தின்படி முடிவெடுக்க ஜமாஅத் தலைவர்கள் மற்றும் பிற பொறுப்பாளர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. தத்தமது செயல் வட்டத்தைப் புரிந்திருப்பதற்கு ஒவ்வொரு பொறுப்பாளரும் எல்லா விதிமுறைகளையும் படிப்பதும் அவர் புரிவதும் அவசியமாகும். சட்ட விதிமுறைகளின்படி செயல்படுவீர்கள் எனில் செயற்குழுவுக்குள்ளும் ஜமாஅத் நபர்களுக்கும் நிம்மதியின்மையை உருவாக்குகிற அந்த நிகழ்வுகள் நடக்காது. பிறகு பொறுப்பாளர்களுக்கு ஒரு சிறப்புத்தன்மை இருக்க வேண்டும். அது என்னவென்றால், ஜமாஅத் நபர்களுடன் நமக்கு கீழுள்ளவர்களுடனும் நல்ல முறையில் நடக்க வேண்டும். ஜமாஅத்தின் பெரும்பாலான பணிகள் தன்னார்வப் பணிகளாக இருக்கின்றன. ஜமாஅத் மக்கள் நேரத்தை தருகிறார்கள். ஜமாஅத் பணிகளுக்காக நேரம் தரக் காரணம் அவர்கள் இறை திருப்தியை விரும்புகிறார்கள். அவர்கள் நேரம் தரக் காரணம் அவர்களுக்கு ஜமாஅத்துடன் தொடர்பும் அன்பும் இருக்கிறது. எனவே, பொறுப்பாளர்களும் கூட பணி செய்பவர்களின் உணர்வுகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். இதுவே அல்லாஹ்வின் கட்டளையாகும்.

பிறகு இந்த நல்லொழுக்கத்துடன் தமது உதவியாளர்கள் மற்றும் கீழுள்ளவர்களுக்குப் பணியைக் கற்பிக்கவும் முயற்சி செய்ய வேண்டும். அதன் மூலம் ஜமாஅத் பணியைச் சிறந்த முறையில் நடத்துவதற்கு எப்போதும் தொண்டர்கள் கிடைத்துக் கொண்டிருக்க வேண்டும். ஜமாஅத் பணிகளை அல்லாஹ் நடத்துகிறான் என்பதில் சந்தேகம் இல்லை. வேலையில் அனுபவமுள்ள அதிகாரிகள் மற்றும் பொறுப்பாளர்கள் அதே வேலைக்காக மற்றோர் அணியை ஆயத்தம் செய்வதால் இந்த நற்செயலின் காரணமாக அவர்களுக்கு நற்கூலி கிடைக்கும்.

அல்லாஹ்வின் அருளால் எனக்கோ அல்லது எனக்கு முன் சென்ற கலீஃபாக்களுக்கோ ஜமாஅத் பணி எவ்வாறு நடக்கும் என்ற கவலை ஏற்பட்டதில்லை. ஏனெனில் பணி செய்யக் கூடிய மாசற்ற தூயவர்களைத் தருவதாக இறைவனது வாக்குறுதி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இருக்கிறது. அவன் பணி செய்யக் கூடிய கலப்பற்ற தன்மை உடையவர்களை வழங்கிக் கொண்டிருப்பான் – இன்ஷா அல்லாஹ். (பராஹீனே அஹ்மதிய்யா. ரூஹானி கஸாயின் தொகுதி 1, பக்கம் 267. அடிக்குறிப்பு)

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களது காலத்தில் ஒரு பொறுப்பாளருக்கு எனது திறமையாலும் எனது கடின உழைப்பாலும் தான் பொருளாதார அல்லது சந்தாவின் அமைப்பு மிகவும் சிறப்பாக நடக்கின்றன என்றவோர் எண்ணம் ஏற்பட்டது. ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு இது தெரிய வந்தபோது அவர்கள், அம்மனிதரை அப்பணியிலிருந்து நீக்கி விட்டு வேறு ஒருவரை நியமித்தார்கள். அவருக்கு நிதி விவகாரங்களில் அடிச்சுவடு கூட தெரியாது. ஆனால், இது அல்லாஹ்வின் பணியாகும். காலத்தின் கலீஃபாவுடன் அல்லாஹ் நடந்து கொள்ளும் விதம் ஆகியவற்றின் காரணமாக அந்த வேலையை அறவே தெரியாதிருந்த அந்த அதிகாரி மூலம் அதற்கு முன்பு கற்பனை செய்து கூட பார்த்திராத வளர்ச்சி ஏற்பட்டது.

ஜமாஅத் பொறுப்பாளர்களுக்கும், ஜமாஅத் தொண்டர்களுக்கும் அல்லாஹ் வாய்ப்பு வழங்குகிறான். வாழ்வை அர்ப்பணித்தவருக்கு அல்லாஹ் வாய்ப்பினை வழங்குகிறான். அவர்கள் ஜமாஅத்திற்கும் மார்க்கத்திற்கும் பணி செய்து அல்லாஹ்வின் அருளுக்கு வாரிசாகும் வாய்ப்பினை வழங்குகிறான். அது அல்லாமல் பணியை இறைவன் தானேதான் செய்கின்றான். அது அவனது வாக்குறுதியாகும். எனவே, எவருடைய உள்ளத்திலும் எனது அனுபவம், எனது அறிவுதான் ஜமாஅத் பணிகளை நடத்திக் கொண்டு செல்கிறது என்ற எண்ணம் வர வேண்டாம் அல்லது எனது அனுபவம்தான் ஜமாஅத் பணிகளை நடத்திச் செல்ல முடியும் என்றும் எண்ணம் வர வேண்டாம். ஜமாஅத் பணிகளை இறைவனின் அருளே நடத்திக் கொண்டு செல்கிறது. நமது பல பலவீனங்கள் எத்தகையவை எனில் இது உலகியல் பணியாக இருந்தால் பரக்கத் ஏற்படவே முடியாது. நல்ல விளைவு ஏற்படவே முடியாது. ஆனால், அல்லாஹ் பலவீனங்களை திரையிட்டு மறைத்து மலக்குகள் மூலமாக உதவி செய்கிறான். தப்லீக் பணிகளிலும் உதாரணமாக, இந்த மேற்கத்திய நாட்டில் கூட பெரும் பெரும் தொண்டர்களை அல்லாஹ் ஏற்பாடு செய்துள்ளான். அவர்கள் தமக்குத் தாமே மார்க்க அறிவைப் பெற்றுக் கொண்டு அஹ்மதிய்யத்தின் எதிரிகளிடம் எந்த அளவுக்கு வாயை அடைக்கும் பதில் தருகிறார்கள் எனில் மனிதன் வியந்து போகிறான். பிறகு பெரும்பாலான இளைஞர்கள் இருக்கிறார்கள். அவர்களின் பதிலைக் கேட்டு எதிரிகள் தப்பி ஓடுவதைத் தவிர வேறு வழியே இருப்பதில்லை. எனவே, பொறுப்பாளர்கள் மார்க்க சேவைக்கான வாய்ப்பை ஓர் இறை அருளாகக் கருதுங்கள். அது அல்லாமல் இதற்கு தமது அனுபவம், புத்திக்கூர்மை அல்லது தகுதிகள்தான் காரணம் என்று நினைக்காதீர்.

பொறுப்பாளர்களிடம் இருக்க வேண்டிய இன்னொரு பண்பு இனிய குணமாகும்; நல்லொழுக்கத்துடன் நடப்பதாகும். அல்லாஹ் கூறுகிறான்: وَقُوْلُوْا لِلنَّاسِ حُسْنًا மக்களுடன் மென்மை மற்றும் நற்குணத்துடன் பழகுங்கள். **(2:84)** இதுவும் ஓர் அடிப்படை நல்லொழுக்கமாகும். பொறுப்பாளர்களிடம் இது மிகவும் அதிகமாக இருக்க வேண்டும். தமது கீழுள்ளவர்களிடம் கூட பணி செய்பவர்களுடன் எப்போது பேசிப் பழகினாலும் மற்றவர்களிடம் பேசினாலும் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்கள் உயர் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்த வேண்டும். கடுமையாகப் பேசுவது என்பது சில நிர்வாகக் காரணங்களுக்காக தேவைப்படுகிறது. ஆனால், இது மிக மிக இன்றியமையாத ஓர் அடியாகும். ஒருவருக்கு அன்புடன் புரிய வைக்க முடியும் என்றால் பொறுப்பில் உள்ளவர்களுக்கு நாங்கள் உங்கள் மீது அனுதாபம் உள்ளவர்கள் என்ற உணர்வை ஏற்படுத்துங்கள். **99** சதவிகிதம் பேர் புரிந்து கொள்கிறார்கள். இவர்களுக்கு ஜமாஅத்துடன் தொடர்பு இருப்பதனால் ஒத்துழைக்கத் தயாராகி விடுகின்றனர்.

ஆனால், மிகவும் முக்கியமான பெரிய நிபந்தனையாவது மக்களிடம் இந்தப் பொறுப்பாளர் நம்மீது அனுதாபம் உடையவர் என்ற உணர்வை உருவாக்கி விட்டால் இது நடைபெறும். மக்களிடம் மென்மையுடன் பேசுங்கள். எந்தத் தவற்றையும், தம்மை திருத்திக் கொள்ள வாய்ப்பே தராத அளவுக்கு ஆரம்பத்திலேயே பிடித்து விடாதீர்கள். ஆயினும், தவறு செய்யும் வழக்கம் உள்ளவர்கள் மீண்டும் மீண்டும் செய்பவர்கள், பேச்சுக்கு பேச்சு குழப்பம் ஏற்படுத்த முயற்சி செய்பவர்கள் இத்தகையவர்களுடன் கடுமை காட்டவும் வேண்டியதிருக்கிறது. ஆனால் அதற்கு முன் முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும். அத்துடன் அந்தக் கடுமை கூட சொந்த அகம்பாவத்தை வெளிப்படுத்தும் வடிவம் உள்ளதாக இருக்கக் கூடாது. மாறாக, சீர்திருத்தம் ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யமனுடைய ஆளுநராக நியமிக்கப் –பட்டவரிடம் இவ்வாறு போதனை செய்தார்கள்: ''மக்களிடம் எளிதை உருவாக்குங்கள். சிரமத்தை உருவாக்காதீர்கள். அன்பு மற்றும் மகிழ்ச்சியைப் பரப்புங்கள். வெறுப்பை வளரச் செய்யாதீர்கள்.'' (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 6, பக்கம் 638, ஹதீஸ் எண்.19935 முஸ்னது அபுல் மூஸா அஷ்ஹரி பைரூத்திலுள்ள ஆலமுல் குதுபுல் 1998 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டுள்ளது.) இது பொறுப்பாளர்கள் மற்றும் ஜமாத் நபர்களுக்கிடையில் உள்ள தொடர்பில் ஓர் அழகை உருவாக்கும் போதனையாகும். பிறகு இதன் விளைவாக ஜமாஅத் அன்பர்களுக்கிடையில் ஒருவர் மற்றவருடைய உணர்வைக் கருத்தில் கொள்ளும் ஆன்மா உருவாகி விடுகிறது. எனவே, பொறுப்பாளர்களுக்கு பெரும் பொறுப்பு இருக்கிறது. குறிப்பாக அமீர்மார்கள் தலைவர்கள் மற்றும் தர்பிய்யத் துறை மற்றும் முடிவெடுக்கும் வட்டத்தில் இருப்பவர்களுக்கு பெரும் பொறுப்பு இருக்கிறது. அவர்கள் மக்களுக்கு எளிதை ஏற்படுத்தும் வழியைப் பற்றி சிந்திக்க வேண்டும். ஆனால், அல்லாஹ்வின் கட்டளைக்குள் இருந்தவாறு இவ்வழிமுறையைக் கடைபிடிக்க வேண்டும் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் கட்டளைக்குள் இருந்து கொண்டு இம்முறையைக் கடைபிடிக்க வேண்டும்.

இதன் பொருள், உலகவாதிகளைப் போன்று எளிதை உருவாக்குவதற்காக இறை கட்டளையை மறந்து விடுவதல்ல. நாம் ஷரீஅத்தின் வட்டத்திற்குள் இருந்தவாறு இறைவனது திருப்திக்கு முன்னுரிமை வழங்கியவாறு அடியார்களின் உரிமையையும் வழங்க வேண்டும். தமது உறுதிமொழி மற்றும் அமானிதத்தையும் பாதுகாக்க வேண்டும். நான் ஏற்கனவே கூறியது போன்று ஜமாஅத்தின் சட்ட விதிமுறைகள் சம்பந்தமான நூலை பொறுப்பாளர்கள் ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டும். தமது துறை சம்பந்தமான அறிவைப் பெற வேண்டும். ஒவ்வொருவருக்கும் தத்தமது எல்லை தெரிந்திருக்க வேண்டும். சில நேரங்களில் சில பொறுப்பாளர் –களுக்கு தமது எல்லை தெரிவதில்லை. ஒரு துறை ஒரு பணியைச் செய்கிறது. ஆனால் விதிமுறைகள் மற்றும் சட்டதிட்டங்களில் அது வேறு துறையைச் சார்ந்ததாக எழுதப்பட்டுள்ளது அல்லது சில நேரங்களில் பணிகளுக்கிடையில் சில நுட்பமான வித்தியாசம் இருக்கும். அதனை ஆய்வு செய்யாமல் பிறகு இரு துறைகள் ஒருவர் மற்றவரின் உரிமையில் தலையிடுகின்றனர். கடந்த நாட்களில் எனக்கு யூ.கே –வின் செயற்குழுவுடன் சந்திப்பு இருந்தது. எனக்கு அங்கு இந்த உணர்வு ஏற்பட்டது. நுட்பமான வித்தியாசங்களைப் புரியாததன் காரணமாக தேவையற்ற விவாதங்கள் ஆரம்பமாகின்றன. விதிமுறைகளைப் படித்தால் இவ்வாறு நேரம் வீணாகாது.

உதாரணமாக, தப்லீகின் துறை தப்லீக் திட்டங்களையும் நடத்த வேண்டும். தொடர்பும் கொள்ள வேண்டும். தொடர்புகள் மூலமே தப்லீக் மேலும் வளரும். அதேபோன்று வெளி விவகாரத்துறையும் கூட தொடர்பு கொள்ள வேண்டியதுள்ளது. ஜமாஅத்தினை அறிமுகம் செய்ய வேண்டியதுளளது. இரண்டின் வட்டமும் தனித்தனியானவையாகும். ஒன்று, தப்லீக் நோக்கத்தில் செய்ய வேண்டியது. இன்னொன்று மக்கள் தொடர்புக்காக *Public Relation* செய்ய வேண்டியதுள்ளது. அசல் நோக்கம் ஜமாஅத்தின் அறிமுகமும் மார்க்கத்தின் பக்கம் வழிகாட்டுவதும் ஆகும். அதன் மூலம் உலகை இறைவன் பக்கம் கொண்டு வந்து அவர்களது உலகம் மற்றும் மறுமை இரண்டையும் சரிப்படுத்த முயற்சி செய்ய வேண்டும். உலகத்திற்கு அமைதியின் பக்கம் கவனமூட்ட வேண்டும். உலக அளவில் எந்த நற்பெயர் பெறுவதும் நமது நோக்கமல்ல. அசல் நோக்கம், இறைவனை மகிழ்ச்சிப்படுத்தி அவனது திருப்தியைப் பெறுவதாகும். துறைகள் ஒன்றுக்கொன்று ஒத்துழைப்பு வழங்கினால் அதன் விளைவு பல மடங்கு அதிகமாக முடியும். பெரும்பாலான இடங்களில் இன்னொரு விஷயம் வெளிப்படுத்தப்படுகிறது. துறைகளில் பட்ஜெட் சரியாக வரையறுக்கப்படுவதில்லை. ஒவ்வொரு துறைக்கும் ஆலோசனைக் கூட்டத்தில் *Pass* ஆகிற பட்ஜெட்டை வழங்க வேண்டும். அதனை செலவு செய்வதற்கு சம்பந்தப்பட்ட துறை செயலருக்கு சுதந்திரம் இருக்க வேண்டும். ஆயினும், இன்னொன்றும் அவசியமாகும். செயலர் வருடத்தில் திட்டங்களை எடுத்து வைக்க வேண்டும். பிறகு ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டத்திற்கேற்ப செலவு செய்யப்பட வேண்டும். பிறகு ஒவ்வொரு செயற்குழுவிலும் அப்பணிகளைக் குறித்து ஆய்வு செய்ய வேண்டும். ஒப்புதல் வழங்கப்பட்ட திட்டங்களில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அல்லது வளர்ச்சிக்கு ஏதாவது வழி இருப்பதாக எவருக்காவது கவனம் ஏற்பட்டு அவர் கவனமூட்டினால் அதன்படி மீண்டும் ஆய்வு செய்யப்பட வேண்டும். பிறகு அமீர்மார்கள், தலைவர்கள், செயலர்கள் ஆகியோரின் மிக முக்கியமான பணியாவது, மேலிடத்திலிருந்து என்ன வழிகாட்டல்கள் வருகின்றனவோ, சுற்றறிக்கைகள் வருகின்றனவோ அவற்றை உடனே முழு கவனத்துடன் செயல்படுத்த வேண்டும். ஜமாஅத்துகள் மூலமாக அதனை செய்ய வைக்க வேண்டும்.

சில ஜமாஅத்துகள் பற்றி தலைமையக வழிகாட்டல்களின்படி அவர்கள் முழுமையாகச் செயல்படுவதில்லை என்ற புகார்கள் வருகின்றன. ஏதாவது வழிகாட்டல் பற்றி குறிப்பான ஒரு நாடு அல்லது ஜமாஅத் பற்றி சூழ்நிலை அல்லது நாட்டின் நிலைமைகளின் காரணமாக மாற்றுக்கருத்து இருக்கும் எனில் மீண்டும் உடனே தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு அதில் மாற்றம் செய்வதற்கு நிலைமைக்கேற்ப விண்ணப்பம் செய்ய வேண்டும். இந்தப் பணி ஜமாஅத்தின் அமீர் அல்லது தலைவரின் பணியாகும். தமது அறிவைக் கொண்டு நிறுத்தியவாறு

அந்த வழிகாட்டலை ஒருபுறம் தூக்கி வைத்து அழித்து விடுவது அல்லது செயல்படாமல் இருப்பது அல்லது தலைமையகத்திற்கு தகவல் தராமல் இருப்பது போன்றவை எவ்வகையிலும் சரியில்லை. இந்தச் செயலை எந்த அமீரோ ஜமாஅத்தின் தலைவரோ செய்தால் தலைமையகத்தைப் புறக்கணிக்கும் செயலாக அது கருதப்படும். அது குறித்து தலைமையகம் நடவடிக்கையும் எடுக்கலாம்.

வஸிய்யத் செய்தவர்களைப் பற்றியும் நான் கூற விரும்புவதாவது, வஸிய்யத் செய்தவர் முதலில் நினைவில் கொள்ள வேண்டிய விஷயம், தமது சந்தாவை வழங்கியது சம்பந்தமான கணக்கை தாமே வைத்திருப்பது அவரது பொறுப்பாகும். ஆனால், தலைமையக அலுவலகம் மற்றும் சம்பந்தப்பட்ட செயலரின் பணியும் இதுவேயாகும். அவர் ஒவ்வொரு வஸிய்யத் செய்தவரின் கணக்கையும் முழுமையாக வைத்திருக்க வேண்டும். தேவைப்படும் போது அவர்களுக்கு நினைவூட்டவும் வேண்டும். அவர்களின் சந்தாவின் நிலை என்ன என்பதை தெரிவிக்க வேண்டும். தேசிய ஜமாஅத்தின் பணியாவது, உள்ளூர் ஜமாஅத்துகளின் செயலர்களை செயற்துடிப்புள்ளவர்களாக ஆக்க வேண்டும். ஒவ்வொரு வஸிய்யத் செய்தவரும் உள்ளூர் செயலரின் தொடர்பில் இருக்க வேண்டும். சில வேளை, பார்க்கும் போது தெரிய வருகிறது. ஏதாவது ஒரு விவகாரத்தில் ஒருவரைப் பற்றி அறிக்கை கேட்கப்பட்டால் அம்மனிதர் வஸிய்யத் செய்தவராக இருந்திருக்கிறார். இவர் இத்தனை வருடங்களாக வஸிய்யத் சந்தா தரவில்லை என்று அறிக்கை கொடுக்கப்படுகிறது. வஸிய்யத் சந்தா தரா விட்டால் அவரது வஸிய்யத் மட்டும் எப்படி நிலை நிற்கும் என்று கேள்வி கேட்கப்பட்டால் பிறகு ஆய்வு செய்யும் போது தெரிய வருகிறது. வஸிய்யத் செய்தவருடைய தவறு இல்லை. அவர் சந்தாவை கொடுக்கத்தான் செய்தார். ஆனால், அலுவலகத்தில் பதிவேடு வைத்திருப்பவர்கள் சரியான பதிவேட்டை வைத்திருக்கவில்லை. அத்தகைய அறிக்கை ஒன்று, காரணமில்லாமல் வஸிய்யத் செய்தவரை தொந்தரவு செய்யக் காரணமாகிறது. இரண்டாவது, ஜமாஅத் அமைப்பின் பலவீனம் பற்றிய தீய தாக்கம் ஏற்படுகிறது. இப்போது மிகத் துல்லியமான ஏற்பாடுகள் உருவாகி விட்டன. நல்ல *Systmatic* முறைகள், கம்பியூட்டர்கள் எல்லாம் இருக்கின்றன. அத்தகைய தவறு ஏற்படவே கூடாது. ஒவ்வொரு நாட்டின் வஸிய்யத் செயலர், நிதிச் செயலர் தமது நாட்டிலுள்ள ஒவ்வொரு ஜமாஅத்தின் சம்பந்தப்பட்ட செயலரையும் செயற்துடிப்புள்ளவராக்க வேண்டும். ஜமாஅத்தின் அமீர்மார்களின் பணியும் இதுவேயாகும். அவர்கள் அவ்வப்போது ஆய்வு செய்து கொண்டிருக்க வேண்டும். வெறுமனே சந்தாவைத் திரட்டுவதும் அறிக்கை தருவதும் மட்டும் அவர்களின் பணியல்ல. மாறாக, இந்த அமைப்பை நம்பத்தகுந்ததாக ஆக்குவதும் தலைமையக ஜமாஅத் அமைப்பையும் உள்ளூர் ஜமாஅத் அமைப்பையும் உறுதியாக ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக உருவாக்குவதும் அமீர்மார்களின் பணியாகும். அதுபோன்று முபல்லிக்குகள் மற்றும் முரப்பிகளுக்கு ஒரு விஷயம் கூற விரும்புகிறேன். சில இடங்களில் முறைப்படி முபல்லிக் மற்றும் முரப்பிகளின் மீட்டிங் நடப்பதில்லை. முபல்லிக் இன்சார்ஜ்கள் இதற்குப் பொறுப்பாளிகளாவர். இந்த மீட்டிங்குகள் முறைப்படி மாதந்தோறும் நடக்க வேண்டும். ஜமாஅத்தின் தர்பிய்யத் மற்றும் தப்லீக் பணிகளின் ஆய்வு நடை பெற வேண்டும். சிறந்த பணிகளை ஒருவர் செய்திருக்கும்போது அது குறித்து பேச வேண்டும்.

அதனை மற்றவரும் செய்து பயனடைய முயற்சி செய்ய வேண்டும். அதனைப் போன்று ஜமாஅத் செயலர்கள் ஜமாஅத்திற்கு வழிகாட்டல் வழங்குகின்றனர் அல்லது தலைமையக வழிகாட்டலுக்கேற்ப ஜமாஅத்துகளுக்கு வழிகாட்டல்கள் அனுப்பட்டுள்ளன என்றால் அதுபற்றியும் அறிக்கை கொடுங்கள். முரப்பிமார்கள் இதனையும் பாருங்கள். ஒவ்வொரு ஜமாஅத்திலும் இவ்விஷயத்தில் எவ்வளவு வேலை நடைபெற்றுள்ளது என்று பாருங்கள். எங்கு செயலர்கள் செயற்துடிப்புடன் இல்லையோ குறிப்பாக தப்லீக், தர்பிய்யத் மற்றும் பொருள் தியாக விவகாரங்களில் அவ்வாறு இருந்தால் முரப்பி மற்றும் முபல்லிக்குகள் கவனமூட்டுங்கள். எல்லாப் பொறுப்பாளர்களுக்கும் அல்லாஹ் வாய்ப்பளிப்பானாக! வரக்கூடிய 3 ஆண்டுகளுக்கு அவர்களுக்கு அல்லாஹ் தொண்டு செய்ய வாய்ப்பு தந்துள்ளான். அதில் அவர்கள் அதிகமதிகமாக எல்லா திறமைகளையும் பயன்படுத்தியவாறு பணி செய்யட்டுமாக! தமது ஒவ்வொரு சொல் செயல் மூலம் ஜமாஅத்திற்கு ஒரு முன்மாதிரியாக அவர்கள் விளங்குவார்களாக!

தொழுகைக்கு பிறகு நான் ஒரு ஜனாஸா காயிப் தொழ வைப்பேன். கண்ணியத்துக்குரிய தாஹிரா சித்தீகா சாஹிபா. இவர்கள் சாஹிப் ஸாதா மிர்ஸா முனீர் அஹ்மத் சாஹிபுடைய மனைவியாவார்கள். 13 ஜூலை 2016 அன்று மாலை 6.00 மணிக்கு இவர்கள் மரணமடைந்தார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ இவர்கள் ஹஸ்ரத் நவாப் அப்துல்லாஹ் கான் சாஹிப் மற்றும் நவாப் அமத்துல் ஹஃபீஸ் பேகம் சாஹிபா இருவருக்கும் பிறந்தார்கள். நவாப் முஹம்மத் அலி கான் சாஹிபுடைய பேத்தியாவார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மகள்வழிப் பேத்தியாக இருந்தார். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிபின் மருமகளாகவும் இருந்தார். அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். 95 வயது வரை வாழ்நாளைப் பெற்றிருந்தார்கள். காதியானில் தொடக்கக் கல்வியை மெட்ரிக் வரை படித்தார்கள். ஹஸ்ரத் அம்மாஜான் (ரலி) அவர்கள் இவரை தனது மகளாக ஆக்கிக் கொண்டார்கள். அன்னார் மீது சிறப்பான அன்பும் நேசமும் காட்டினார்கள். ஜெஹ்லமில் சாஹிப் ஸாதா மிர்ஸா முனீர் அஹ்மத் சாஹிபுடன் வாழ்ந்தார்கள். மிர்ஸா முனீர் அஹ்மத் சாஹிபுடைய *Chip Board Factory* சில மாதங்களுக்கு முன் எரிக்கப்பட்டது. அங்கு இவர் சத்ர் லஜ்னாவாக தொண்டு செய்து வந்தார். பிறகு 1974 –ல் குழப்பம் ஏற்பட்டபோது ஜெஹ்லம் ஜமாஅத்தின் பெரும் பகுதி மக்கள் *Chip Board* தொழிற்சாலையில் ஒன்று திரண்டனர். மர்ஹூமா அவர்கள் அந்நாட்களில் ஜமாத்தினருக்கு நல்ல முறையில் விருந்தோம்பல் செய்தார்கள். அன்னாரின் ஒரு மகளாக அமத்துல் ஹஸீப் பேகம் இருந்தார். இவர் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹின் மகனான மிர்ஸா அனஸ் அஹ்மத் சாஹிபுடைய மனைவியாவார்கள். இவரது இன்னொரு மகன் மிர்ஸா நஸீர் அஹ்மத் சாஹிப் ஜெஹ்லமின் ஜமாஅத்தின் அமீராக இருந்தார். இவர்களுடைய தொழிற்சாலை இருக்கும் வரை இருந்தார்கள். இவர்களுடைய தொழிற்சாலை போனபோது இவர்கள் ஜெஹ்லமை விட்டு வெளியேற வேண்டியது வந்தது. அதே போன்று ஹஸ்ரத் மிர்ஸா ஸஃபீர் அஹ்மத் சாஹிப் ஹஸ்ரத் நான்காவது கலீபதுல் மஸீஹ் உடைய மருமகன் ஆவார். இவரும் இவர்களுடைய மகன் ஆவார்கள்.

மர்ஹூமா மிகவும் இனிய குணமும் பழகுவதற்கு எளியவராகவும் பொறுமையாளராகவும் இருந்தார்கள். நன்றி செலுத்தக்கூடியவர். துஆ செய்பவர். தஹஜ்ஜுத் தொழுபவர். இறை வணக்கத்தில் ஆர்வமுள்ள பெண்ணாக இருந்தார்கள். கிலாஃபத்துடன் ஆழிய தொடர்பு கொண்டவர்கள். பொருளாதார திட்டத்தில் சுறுசுறுப்பாக பங்கெடுப்பவர். விருந்தோம்பல் இவர்களின் பண்பாக இருந்தது. பெண்மணியாக இருந்தும், ஜமாஅத் அமைப்பிற்கு எதிராக எந்தப் பேச்சையும் சகிக்க மாட்டார்கள். எவராவது கிலாஃபத்துக்கு எதிராகவோ ஜமாஅத் அமைப்புக்கு எதிராகவோ பேசினால் உடனே அவரை அவ்வாறு பேசுவதிலிருந்து தடுத்து நிறுத்துவார்கள்.

ஹஸ்ரத் அம்மாஜான் நான் கூறியது போன்று இவர்களை மகளாக வளர்த்தார்கள். அம்மாஜான் தனது நிறைய சொந்த பொருட்களை சீதனமாக இவர்களுக்கு கொடுத்தார்கள். அவற்றில் அம்மாஜான் உடைய பெயர் கூட எழுதப்பட்டுள்ளது. அல்லாஹ் மர்ஹூமாவின் தகுதியை உயர்த்துவானாக! அல்லாஹ் இவருடன் மன்னிப்புடன் நடந்து கொள்வானாக; கருணையுடன் நடந்து கொள்வானாக! அவர்களது சந்ததிகளுக்கும் அவர்களின் நன்மைகளின்படி நடக்க வாய்ப்பு தருவானாக! கிலாஃபத்துடன் எப்போதும் தொடர்புடன் வைப்பானாக!

---

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

பெற்றிருப்பவனாவேன் என்ற இந்த ஷய்த்தானிய அகந்தையை கை விட்டு விட்டு தன்னை ஓர் அறிவீனனைப் போன்று எண்ணிக் கொள்ள வேண்டும். மேலும், துஆ செய்வதில் ஈடுபட்டிருக்க வேண்டும். அப்போது ஏகத்துவத்தின் ஒளி இறைவன் புறமிருந்து அவர் மீது இறங்கும். மேலும் ஒரு புதிய வாழ்வை அவருக்கு வழங்கும்.

இறுதியில், நாம் இதனை கூறுவதை அவசியமானதாகக் கருதுகின்றோம். நாம் ஒரு வாதத்திற்காக ‘அல்லாஹ்’ என்ற சொல் பொதுவான பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் மொழியாக்கம் இறைவன் என்பதாகும் என்று வைத்துக் கொண்டு திருக்குர்ஆனை ஆழமாக சிந்தித்துப் பார்க்கும் போது தெரிய வருகின்ற பொருளில் அதாவது, ‘அல்லாஹ்’ என்று கூறும்போது அவனே திருக்குர்ஆனை இறக்கியவன்; ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அனுப்பியவன் ஆகிய பொருள்களும் அதில் அடங்கும் என்பதை நாம் மறுப்பதாக இருந்தாலும் கூட இந்த வசனம் எதிரிக்கு எந்தப் பயனையும் தரப்போவதில்லை. ஏனென்றால், அல்லாஹ்வை ஏற்றுக் கொள்வது மட்டும் இரட்சிப்பைப் பெற போதுமானது என்பது இதன் பொருள் அல்ல. மாறாக, இதன் பொருள், இறைவனின் மகத்தான பெயராக விளங்குகின்ற கண்ணியத்திற்குரிய இறைவனின் எல்லா முழுமையான பண்புகளையும் தன்னகத்தே கொண்டுள்ள அந்த அல்லாஹ்வின் மீது எவர் நம்பிக்கை கொண்டுள்ளாரோ அவரை இறைவன் வீணாக்க மாட்டான். அவன் படிப்படியாக அப்படிப்பட்டவரை இஸ்லாத்தின் பக்கம் கொண்டு வருவான். ஏனென்றால், ஓர் உண்மை இன்னோர் உண்மையில் நுழைய உதவி செய்கின்றது. அல்லாஹ்வின் மீது கலப்பற்ற முறையில் நம்பிக்கை கொள்பவர்கள் இறுதியில் உண்மையைப் பெற்றுக் கொள்கின்றனர்.

*(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 147-149 )*

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் எப்போதெல்லாம் எங்கு பள்ளிவாயில் கட்டினாலும் அது ஓர் அமைதியின் வீடாக இருக்கின்றது. அங்கு திருக்குர்ஆனின் உயர்வான போதனைகளின் ஒளியில் மக்கள் அல்லாஹ்வை வணங்குவதற்காக ஒன்று கூடுகின்றனர். நமது பள்ளிவாயில்களின் கதவுகள் இறைவனை வணங்க விரும்புகின்ற மற்றும் அமைதியை விரும்புகின்ற அனைத்து மக்களுக்காகவும் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது.*

## சுவீடனிலுள்ள மால்மோவில் மஹ்மூது பள்ளிவாயிலின் துவக்கத்திற்காக நடைபெற்ற நிகழ்ச்சியில் 14 மே 2016 அன்று ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ஆற்றிய எழுச்சியூட்டக்கூடிய சொற்பொழிவு

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

இஸ்லாத்தின் இன்னொரு பொன்னான போதனை என்னவென்றால், அது முஸ்லிம்களிடம் தமது அண்டை வீட்டுக்காரர்களின் உரிமைகளைச் செலுத்துவது மற்றும் தேவைப்படும்போது அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்றும், அவர்களுக்கு தொண்டு செய்ய வேண்டும் என்றும் கட்டளையிடுகின்றது. இஸ்லாத்தின் தோற்றுனரான ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.'.பா (ஸல்) அவர்கள் ஒருமுறை, அல்லாஹ், அண்டை வீட்டுக்காரர்களின் உரிமைகளைச் செலுத்துவது பற்றி எந்த அளவு வலியுறுத்திக் கூறியுள்ளான் என்றால், அல்லாஹ் அண்டை வீட்டுக்காரர்களுக்கு வாரிசு என்ற நிலையில் உள்ள உரிமைகளையும் தந்து விடுவான் என்று எனக்கு தோன்றியது என்று கூறினார்கள்.

பிறகு அல்லாஹ் அந்நிஸா என்ற அதிகாரத்தின் 37 -வது வசனத்தில் இவ்வாறு கூறுகின்றான்:

மேலும் நீங்கள் இறைவனை வணங்குங்கள். எதனையும் அவனுக்கு இணையாக ஆக்காதீர்கள். பெற்றோர்களுடன் மிகவும் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். மேலும், உறவினர்களுடனும் அனாதைகளுடனும் ஏழைகளுடனும் அவ்வாறே உறவினர்களான அண்டை வீட்டுக்காரர்களுடனும் உங்களோடு தொடர்பில் இல்லாத அந்நியர்களாக அண்டை வீட்டுக்காரர்-களுடனும் உங்களுக்கு அருகில் அமர்ந்திருப்பவர்களுடனும், பயணிகள் மற்றும் எவர்களுக்கு நீங்கள் எஜமானனாக இருக்கின்றீர்களோ அவர்களுடனும் நீங்கள் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். கர்வங் கொண்டோரையும், பெருமையடிப்பவரையும் அல்லாஹ் ஒருபோதும் நேசிப்பதில்லை.

நாம் இந்த வசனத்தைப் பார்த்து அதைப் பற்றி சிந்திக்கும்போது இஸ்லாம் மனித இனத்தின் உரிமைகளைச் செலுத்துவதன் பக்கம் எந்த அளவு வலியுறுத்திக் கூறுகின்றது என்பது தெரிய வரும். இந்த வசனத்தில் அல்லாஹ், அவனுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளையும் இறை அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளையும் இணைத்துக் கூறியவாறு அவர்கள் ஒன்றை மற்றொன்றுடன் தொடர்புபடுத்தி அவற்றை கட்டாயமாக்கியுள்ளான்.

இந்த வசனத்திலிருந்து தமது பெற்றோர்கள், குடும்பத்தினர், தமது நண்பர்கள் ஆகியோர் முதல் ஏழைகள், தேவையுடையவர்கள், அனாதைகள் மற்றும் சமுதாயத்திலுள்ள அனைத்து ஏழைகள் ஆகியோர் வரையிலுள்ள எல்லா மனிதர்களுக்கும் அவர்களது தொடர்பு எந்தவோர் இனத்தையோ அல்லது சமுதாயத்தையோ அல்லது குலத்தையோ சார்ந்ததாக இருந்தாலும் அவர்களுக்கு தொண்டு செய்வது முஸ்லிம்கள் மீது கடமையாக்கப்பட்டிருக்கிறது எனத் தெரிகிறது. இதற்கு முன்னர் குறிப்பிடப்பட்டிருந்தது போன்றே அண்டை அயலாரின் வட்டம் மிகவும் விரிவானதாகும். உங்களுடன் இருப்பவர்கள் மட்டும் அண்டை வீட்டுக்காரர்கள் அல்ல. மாறாக, இதில் உங்களுடன் வேலை செய்பவர்கள் முதல் உங்களுடன் பயணம் செய்கின்றவர்கள் வரையிலுள்ள அனைத்து மக்களும் வந்து விடுவர். எனவே, இஸ்லாத்தின் பார்வையில் அன்பின் வட்டத்திற்கு எந்த எல்லையும் இல்லை. அவ்வாறிருக்கும்போது ஓர் உண்மையான முஸ்லிம் மற்றவர்களுக்கு இழப்பை ஏற்படுத்த முயற்சி செய்வார் அல்லது சமுதாயத்தில் குழப்பம் ஏற்படக் காரணமாக இருப்பார் என்பது எவ்வாறு சாத்தியமாக முடியும்? உண்மையில் இது சாத்தியமற்றதாகும். ஒரு நபர் மற்றவர்களது உரிமையைச் செலுத்துபவர்களாக இருக்கும்போதுதான் அவர் உண்மையான முஸ்லிமாக இருக்க முடியும்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நிச்சயமாக தற்போதுள்ள நிலைமைகளைக் கருத்தில் கொண்டவாறு உங்களிலுள்ள சில மக்கள் மற்றும் குறிப்பாக இந்தப் பள்ளிவாயிலுக்கு அருகிலுள்ள அண்டை வீட்டுக்காரர்கள் நேரடியாக ஒருவேளை இந்தப் பள்ளிவாயிலினால் நமக்கு பாதிப்பு ஏற்படும் என்று அஞ்சலாம். எந்த விஷயத்தைப் பற்றி உங்களுக்கு தெரியாதோ அது தொடர்பாக அஞ்சுவது ஓர் இயல்பான விஷயமாகும். எனவே, இந்த பள்ளிவாயிலுக்கு அருகில் இருப்பவர்கள் இந்த பள்ளிவாயில் திறக்கப்பட்டதன் மூலம் ஒருவேளை இந்த நகரத்தின் அமைதி கெட்டு விடலாம் என்று கவலை அடையலாம் என்றாலும், எனக்கு தெரிந்துள்ள, நான் செயல்படுகின்ற அந்த இஸ்லாத்தின் அடிப்படையில் இந்தப் பள்ளிவாயில் அமைதியின் நீரூற்றாக இருப்பது நிரூபணமாகும். அதிலிருந்து எப்போதும் அன்பும் நேசமும் தான் மலரும் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கின்றேன். இந்தப் பகுதியில் வாழ்கின்ற அஹ்மதி முஸ்லிம்கள் அமைதி, நேசம் மற்றும் பரஸ்பரம் தங்களுக்கிடையில் ஒருவொருக்கொருவர் கண்ணியமாக நடந்து கொள்வது ஆகியவற்றை வளர்ச்சி அடையச் செய்வதையும் முன்பை விட அதிகமாக தமது அண்டை வீட்டுக்காரர்களுக்கு தொண்டு செய்வதையும் நீங்கள் காண்பீர்கள் - இன்ஷா அல்லாஹ். ஏனென்றால், இந்த விஷயங்களையே அவர்களது மார்க்கம் அவர்களிடம் வேண்டுகின்றது.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்: இதுவே அந்த ஒப்பற்ற உயர்வான போதனைகளாகும். இவற்றை அஹ்மதிய்யா ஜமாஅத் தப்லீக் செய்வதுடன் மட்டுமல்லாமல் அதற்கும் மேலாக உலகின் ஒவ்வொரு பகுதியிலும் அப்போதனைகளை அது செயல்படுத்துகின்றது. நாங்கள் உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கான பள்ளிவாயில்களைக் கட்டி இருக்கின்றோம். நாங்கள் எப்போதும் இதைப் பார்த்திருக்கின்றோம். அதாவது, மக்கள் எங்கள் ஜமாஅத்தைப் பற்றி அறிய விரும்புகின்றபோது பிறகு, விரைவில் அவர்களது அச்சம் விலகி விடுகின்றது. மேலும், சமுதாயத்தின் முக்கிய ஓர் அங்கமாகக் கருதியவாறு அவர்களை வரவேற்கின்றனர். மேலும், எங்களுக்கு மதிப்பளிக்க ஆரம்பித்து விடுகின்றனர்.

நான் கூறியது போன்று ஆரம்பத்தில் இருக்கின்ற இந்த அச்சம் விரைவில் முடிவடைந்து விடும். மேலும், இந்த பள்ளிவாயிலில் இருந்து எல்லா திசைகளிலும எதிரொலிக்கின்ற அமைதியின் தூதுச் செய்தி நமது அண்டை வீட்டுக்காரர்களின் கண்களுக்குத் தெரிகின்ற நம்பிக்கை நட்சத்திரமாக ஆகி விடும். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தனது மார்க்கத்தை பிரச்சாரம் செய்வதிலும் தமது பள்ளிவாயில்களைக் கட்டுவதிலும் மட்டுமே ஈடுபட்டுக் கொண்டிருப்பதில்லை. மாறாக, துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் மக்களது வேதனைகளை அகற்றுவதற்காகவும் முயற்சி செய்கின்றது என்பதையும், முற்றிலும் நம்பிக்கையிழந்து இருக்கின்ற அந்த மக்களுக்கும் கூட அது நம்பிக்கையைத் தருகின்றது என்பதையும் உள்ளூர் மக்கள்

MBBS IN BANGLADESH
YOUR SAFE & AFFORDABLE DESTINATION FOR PURSUING MBBS IS BANGLADESH
ADMISSION IN PVT MEDICAL COLLEGES SESSION 2016
BANGLADESH MEDICAL COLLEGE
JAHRUL ISLAM MEDICAL COLLEGE
AD-DIN WOMEN'S MEDICAL COLLEGE
MONNO MEDICAL COLLEGE
ENAM MEDICAL COLLEGE
GREEN LIFE MEDICAL COLLEGE
Salient Features:
Recognised By MCI IMED & BM&DC
Lowest Packages Payable In Installments
Excellent Faculty & Hostel facility
Package Starts From 33,000 USD (20.00 Lacs Approx.) With Hostel.
Contact With Original Certificates & Passport
NEEDS EDUCATION KASHMIR
An ISO 9001 - 2008 Certified Consultancy
Qureshi Building, Opp. Akhara Building, Next Building To KBD Book Shop, Near Budshah Bridge, Sgr.-190001
Mob.: 09596580243 | 09419001671
Email: needseducation@outlook.com
H/o:- 69/C 5th floor, Panthapath Dhaka
Saba Ads #9906928638

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 99448-03650
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Vol. 1 Thursday 18 AUGUST 2016 Issue No. 24

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
Tel. : +91 1872-224757
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

பார்ப்பார்கள். பள்ளிவாயில்கள் மூலமாக சமுதாயத்திலுள்ள ஏழைகளுக்கும் ஆதரவற்றவர்களுக்கும் சிறந்த எதிர்காலத்தை அமைத்துத் தருவதற்கு நாங்கள் முயற்சி செய்கின்றோம். இந்த முயற்சிகளின் விளைவாகவே அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் உலகிலுள்ள தொலை தூரப் பகுதிகளில் பள்ளிக்கூடங்களையும் மருத்துவமனைகளையும் கட்டி இருக்கின்றது.

இந்த முயற்சிகளின் விளைவாக அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் உலகிலுள்ள தொலைதூரப் பகுதிகளில் பள்ளிக்கூடங்களையும் மருத்துவமனைகளையும் கட்டியுள்ளது. அது உலகில் இவற்றைப் பெறாமல் இருக்கின்ற மக்களுக்கு அவர்களது நிறம், இனம் மற்றும் மார்க்கம் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்ட நிலையில் அவர்களுக்கு தேவையான மருத்துவ வசதிகளையும், கல்விக்கான ஏற்பாட்டினையும் செய்துள்ளது. இந்த உதவிப் பணிகளில் இதுவும் ஒன்றாகும். அதாவது, நாங்கள் உள்ளம் உடைந்து போய் இருக்கின்ற அவநம்பிக்கையின் நிலைமைகளில் இருக்கின்ற மக்களுக்கு தண்ணீர் குழாய்களைப் பொருத்தி கொடுத்து குடிப்பதற்கான தூய்மையான தண்ணீர் கிடைப்பதற்கான ஏற்பாட்டினையும் செய்திருக்கின்றோம். தொடர்ந்து தண்ணீர் கிடைத்துக் கொண்டிருக்கின்ற இந்த மேற்கத்திய நாடுகளில் வாழ்ந்தவாறு தண்ணீரின் மதிப்பை உணர்ந்து நடப்பது மிகவும் கடினமான பணியாகும். நீங்கள் ஆப்பிரிக்காவில் மிகவும் தொலைவிலுள்ள பகுதிகளுக்குச் சென்று உங்களது கண்களால் எவ்வாறு சிறு குழந்தைகள் தினமும் பல கிலோ மீட்டர்கள் நடந்தே சென்று தங்களது தலைகளில் தண்ணீர் குடங்களைச் சுமந்தவாறு அவற்றை அக்குழந்தைகள் வீட்டிற்கு கொண்டு வருவதை பார்க்கும்போது உங்களுக்கு தண்ணீரை போன்ற அருளை பற்றி கணித்துக் கொள்ள முடியும். எந்த தண்ணீரைக் கொண்டு வருவதற்காக அவர்கள் இந்த அளவு உழைக்கின்றார்களோ அது அரிதாகதத்தான் தூய்மையாக இருக்கும். பொதுவாக அந்த தண்ணீர் அசுத்தமானதாகத்தான் இருக்கும். அது பலவகையான நோய்களுக்கும் காரணமாக இருக்கின்றது. எனவே, அஹ்மதி முஸ்லிம்கள் தமது மார்க்கப் போதனைகளின் காரணமாக அத்தகைய மக்களுக்கு உதவி செய்து அவர்களுக்கு சுகத்தை வழங்கச் செய்கின்ற முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். நாங்கள் மக்கள் கொள்கைகள், மார்க்கம் மற்றும் பின்னணி ஆகியவற்றிற்கு அப்பாற்பட்ட நிலையில் தேவையுள்ள அனைவருக்கும் தொண்டு செய்கின்றோம். எங்கெல்லாம் நாங்கள் பள்ளிவாயில்களைக் கட்டுகின்றோமோ அங்குள்ள சமுதாயம் மற்றும் அதற்கு அருகில் வசிக்கின்ற மக்களுக்கு உதவி செய்வதில் பயனுள்ள பங்கைச் செலுத்துவதற்கு நாங்கள் முயற்சி செய்கின்றோம். எனவே, இந்த நகரத்திலுள்ள மக்கள் மற்றும் சுவீடனிலுள்ள எல்லா மக்களுக்கும் இந்தப் பள்ளிவாயில் அன்பு, நேசம், சகோதரத்துவம் ஆகியவற்றின் தலைமையகமாகத் திகழும் என்று நான் ஒருமுறை மீண்டும் உறுதி கூறுகின்றேன் - இன்ஷா அல்லாஹ்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நான் இங்கு வாழ்கின்ற அஹ்மதி முஸ்லிம்களுக்கும் கூட அவர்களின் பொறுப்புகளின் பக்கம் கவனமூட்டுகின்றேன். இப்போது அவை மேலும் அதிகரித்து விட்டன. எங்கு பரஸ்பரம் உங்களில் ஒருவர் மற்றவர் மீது செலுத்தும் அன்பு அதிகமாகின்றதோ அங்கு இஸ்லாமிய போதனைகளின் உண்மையான தூதுவராக ஆகுவதும் கூட உங்களது பொறுப்பாகும். இது ஒவ்வோர் அஹ்மதியின் கடமையாக இருக்கின்றது. அதாவது, அவர் தனது நல்லொழுக்கம் மற்றும் முன்மாதிரியின் மூலமாக இஸ்லாம் தொடர்பாக மக்கள் வைத்திருக்கின்ற அந்த எல்லா அச்சங்களையும் அபாயங்களையும் அழிக்கக் கூடியவையவராக இருக்க வேண்டும். அஹ்மதி முஸ்லிம்கள் நான் கூறுபவற்றின் பக்கம் கவனம் செலுத்துவர் என்றும், உள்ளூர் மக்களுக்கு இஸ்லாம் எந்த விஷயத்திற்கு பிரதிநிதியாகத் திகழ்கின்றது என்பதைப் பற்றி எடுத்துக் கூறுவார்கள் என்றும் முழுமையான நம்பிக்கை இருக்கின்றது.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: உலகம் இந்த நாட்களில் மிகவும் கடினமான காலக்கட்டத்தைக் கடந்து சென்று கொண்டிருக்கின்றது. உலகின் பெரும் பகுதிகளில் குழப்பமும் சண்டைகளும் வேரூன்றி விட்டன. இதற்கான ஒரே தீர்வும் சிகிச்சையும் ஒரு பெரும் பலனுக்காக சுய பலன்களை ஒருபுறம் ஒதுக்கி வைத்து விடுவதேயாகும். கசப்புணர்வு மற்றும் கருத்து வேறுபாடுகளின் காரணமாக பல சமுதாயங்களும் சண்டையிடுவது மற்றும் பொருட்களை உடைப்பது ஆகியவற்றிற்கு இரையாகி விட்டன. அதை அகற்றுவதற்கு அன்பு மற்றும் ஒருமைப்பாட்டின் ஆன்மாவை நிலைநாட்டுவது அவசியமானதாக இருக்கின்றது. தற்போதைய காலக்கட்டத்திலுள்ள பிரச்சனைகள் சிறிய அளவில் இல்லை. மாறாக, பல நாடுகளும் இந்த போர் மற்றும் அநீதியின் ஆக்கிரமிப்பின் கீழ் வந்து விட்டன. இந்த உறுதியற்ற தன்மை மற்றும் சண்டைகளின் தலைமையகமாக சில முஸ்லிம் நாடுகள் ஆகியிருப்பது மிகவும் வேதனைக்குரிய விஷயமாகும். அந்த நாடுகளிலுள்ள அரசாங்கங்கள் தமது குடிமக்களுக்குரிய உரிமைகளைச் செலுத்துவதில் தோல்வி அடைந்து விட்டன. இதன் விளைவாக கடுமையை விரும்புகின்ற சில கிளர்ச்சியாளர்களும் தீவிரவாதப் பிரிவுகளும் எத்தகைய எதிர்நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் என்றால், அதன் மூலமாக பாதிப்பிற்கு ஆளாகியுள்ள சமுதாயம் மேலும், பிரிவினைகளுக்கு இரையாகி விட்டன. இந்தக் காலத்தில் ஒவ்வொரு சமுதாயமும் மார்க்கமும் பரஸ்பரம் அவற்றில் ஒன்று மற்றொன்றுடன் இணைந்திருக்கின்றது. அவை எஞ்சியிருப்பதற்கு அவற்றில் ஒன்று மற்றொன்றைச் சார்ந்து நிற்கின்றது. முஸ்லிம் நாடுகளிலுள்ள சண்டைகள் முதலிலேயே அதிகமாக பரவி விட்டன. அரபு நாடுகளில் நடைபெறுகின்ற போர்கள், அநீதிகள் மற்றும் கொடுமைகளின் காரணமாக இங்கு மேற்கத்திய நாடுகளிலும் கூட ஒரு பிரிவினையும் அமைதியற்ற நிலைமையும் ஏற்பட்டிருப்பதையும் பரஸ்பரம் ஒருவர் மற்றவர்களுக்கிடையிலுள்ள கருத்து வேறுபாடுகள் அதிகரிப்பதையும் நாம் பார்த்துள்ளோம். சிலர் தீவிரவாத பிரிவுகளில் இணைந்து விட்டனர். அவற்றின் உறுப்பினர்கள் இங்குள்ள நாடுகளில் இருந்து கொண்டிருக்கின்றனர். மேலும், இந்தப் பகுதியிலுள்ள அமைதிக்கும் நிம்மதிக்கும் பேராபத்தாக அவர்கள் ஆகியுள்ளனர். இவர்கள் என்னவெல்லாம் செய்கின்றனரோ அதற்கும் இஸ்லாத்திற்கும் உண்மையான போதனைகளுக்கும் சிறிதும் தொடர்பில்லை. எனவே, அமைதியை விரும்புகின்ற நாம் அனைவரும் பிரிவினையை ஏற்படுத்த விரும்புகின்ற இந்த இருள் நிறைந்த சக்திகளுக்கு எதிராக ஒன்றுபட்டு நிற்க வேண்டும். அமைதியை நிலைநாட்டுகின்ற சாத்தியமுள்ள ஒவ்வொரு முயற்சியையும் நாம் செய்ய வேண்டும். அதன் மூலமாக நாம் நமது சந்ததிகளைத் தோல்வி, துர்பாக்கிய நிலை, துக்கம், வேதனை ஆகியவற்றில் மூழ்கியுள்ள உலகிற்கு வாரிசாக்கி விட்டு செல்லக் கூடாது. மாறாக, நாம் நமக்கு பின்னால் உயர்வான முன்னுதாரணங்களை நிலைபெறச் செய்து விட்டு செல்வோம் என்ற விஷயத்தை நாம் உறுதிப்படுத்த வேண்டும். மேலும், வருங்கால தலைமுறையினருக்காக அமைதி நிறைந்த மகிழ்ச்சிகரமான உலகை விட்டுச் செல்பவர்களாக நாம் இருக்க வேண்டும். மனித இனம் தன்னை உண்மையில் படைத்தவனை அடையாளங்கண்டு கொள்ளும்போது தான் இது உண்மையில் சாத்தியமுள்ளதாக ஆகும். மேலும் அது இறைவன் மற்றும் அவனது படைப்பினங்களுக்குரிய உரிமைகளைச் செலுத்தக் கூடியதாக ஆக வேண்டும். அவ்வாறு செய்வதற்கான தகுதியை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக! ஆமீன்.

இறுதியில், ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இந்த சொற்களுடன் நான் மீண்டும் ஒருமுறை நீங்கள் எல்லாரும் இங்கு வந்து எங்களுடன் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அல்லாஹ் எல்லார் மீதும் அருள் புரிவானாக! நன்றி.

இதற்குப் பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் துஆ செய்தார்கள். அதில் வந்திருந்த அனைவரும் தத்தமது வழிமுறைக்கேற்ப பங்கு பெற்றனர்.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad